[illegible]

V 3. N 20. 15 My 1930.

JL
[illegible] 211, N128 KW
N 30 · 3 · 20
189104

1154

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஹூ மே மீ 15உ [No. 20.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 381
2. அப்பர் (யுத்தக்கலை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 383
3. குறுந்தொகை (பாட்டு 58—67)
K. இராமரத்நம் ஐயர் B. A. 385
4. நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—4 பதிகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 388
5. ஆச்சரிய சூடாமணி (சூடாமணி அங்கம்)
R. முத்தையர் 389
6. இலஞ்சிப் பாவை (வாட்போர்)
T. S. நடராஜபிள்ளை. B A., B.L 391
7. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனுக்ஷிசுந்தரன் M.A., B L. 394
8. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 396
9. வர்த்தமானம் 397

கலாநிலயம்

அலையடங்கக் காக்க வேண்டா.

மானுட வாழ்க்கையில் கலைகளுங் கலந்து ஊடாட வேண்டுமென்ற அவசியத்தைக் கற்றவரென்னு மினத்தவரெல்லாம் ஒவ்வுவாரேனும், மறுப்பாருஞ் சிலருளர். சிதம்பரம் அண்ணாமலைச் சர்வ கலா சாலையை நிறுவியபோது, கலைகளுங் காவியங்களுஞ் சனவாழ்க்கைக்குச் சிறிதும் வேண்டப்படுவன வாகா வென்று சென்னைச் சட்டசபை அங்கத்தினர்கள் வாதித்த சொற்களை மறந்திலம். இலக்கியங்களைப் பாடசாலைகளில் போதிப்பதால் நன்மையோ இல்லை யென் றியம்புவதுடன் நில்லாமல் அவர்களிற் சிலர், இவ்விந்தியநாடு ஏதோ வோர் தாழ்ந்தநிலை யடைந்து விட்டதென்றும், அத்தாழ்மைக்குக் காரணமாயிருப் பது இலக்கிய பாடங்களே யென்று துணிந்து கூறிய தும் நம்நினைவினின்று நீங்கவில்லை. இலக்கிய நூல்களை யும் சரித்திர பாடங்களையும் தத்துவ சாஸ்திரங்களை யும் மிக வருந்திப் படித்துப் படித்துச் சர்வகலாசாலை யில் பட்டம் பெறுகின்றவர்கள் தொகை அதிகமாகி யாகி வேலையில்லாமல் எல்லோரும் அல்லலுறுகின்ற னர் என்பதைக் காட்டி அவ்வங்கத்தினர் சிலர் பரிக சித்தனர். "இதற்குப்பதில், தொழிற்சாலைகளை அமை த்து நடத்துதற்குரிய பயிர்ச்சியைப் பாடசாலையில் பெற்றிருப்பாராயின், தாமும் வருவாய்க்கு வழிகண்டு மற்றும் பலர்க்கு வேலை கொடுக்கவல்ல நிலையினராவா ரல்லரோ" என்றும் வினவினர். இத்தகைய சொற் கள் எத்தூரம் தர்க்கம் அநுபவம் சரித்திரம் முதலிய நியாயங்களுக்கு இணங்கியிருக்கின்றன என்பதை முன்னர் நம் தலையங்கங்களின் பலவிடங்களில் ஆராய்ந்திருக்கின்றோம். சென்றவாரத் தலையங்கமும், இவ்வித எண்ணங்கள் பெரும்பான்மை மனப்பால் பருகும்படி முடிகின்றதென்பதை மற்றைத் தேயங்க ளின் நிலைமைகளினின்று தெற்றென விளக்கியிருக் கும். சர்வகலாசாலைப் பட்டங்கள் பெற்றவர்களெல் லாரும் கற்றவர்கள் என்றவோர் எண்ணம் நிலவுகின்ற இக்காலத்தில், அன்னூர் வாய்வரும் சொற்களெல்லாம் உண்மையே என்று பொதுஜனங்கள் நம்பிக்கொள் வது இயற்கையாதலால் 'தக்கதே இவர் உரைத்தனர்' என்று எண்ணிறந்தோர் மதித்து, அவ்வழி ஒழுகித் தாமும் அளவிலாச் செல்வமும் சிறப்பும் எய்தலாம் என்னு மாசையால், பொருளைப் போகவிட்டு நிழலைத் தொடர்ந்துசென்று இறுதியி லோர் நீர்க்குமிழியைத் தழுவிய கொள்கையை உலகின் பலவிடங்களில் கண் டிருந்தும் வாய்தானடங்கவில்லையெனில் இதனை யார் செய்த பாவமென் றியம்பலாம்.

தொழிலின் வளர்ச்சியே தொலையாத இன்ப மெனும் ஊக்கத்தின் கூத்து இவ்வண்ணம் ஒரு புறம் ஓயவேண்டும். நிலவுந்தெய்துவதைக்காணநிற்கும் நாம், கலைகளின் நலங்களைப் பாராட்டுவோர் சிலர் மனத் தையும் ஆராய விழைகின்றோம். காவியப் பயிற்சி ஒருவரையுங் கெடுத்திடாதென்று உரைப்பார் இவர். இவ்வுரைக்கு மிக்க வந்தனம். கெடுக்காது என்பது மாத்திரமல்லாமல், மனிதவாழ்க்கைக்குக் கலைகளால் பல நன்மைகள் உளவென்றும் கூறுவர். இந்தத் துணிவிற்கும் நாம் மிக்க நன்றியுடையவர் களா யிருத்தல்வேண்டும். எனினும், இவ் வாசகங்கள் ஊடாடும் சொற்பொழிவுகளை முழுமையாய்க் கருதி

189104.

நோக்கின், கனலிடை நீர் சொரிந்தாங்கு நமது ஆர்வம் அவிந்தடங்கலாகின்றது. காவியச் சுவையுங் கலையுணர்வும், இவைகளால் எய்தும் மெய்ந்நிலையுமே, வாழ்க்கை என்று விளம்புவதைவிட்டுக் கலைகளை இவர் வாழ்க்கைக்கு ஓர் துணைக்கருவி என்னுந் தூரத்தில் தூரத்திவிடுகின்றனர். கலையினால் பயனுளது என்பது மெய்; ஆனால், அது ஒரு துணைக் கருவி என்னும் தகைமைத்தென்பது பொய். முழுவதும் பொய்யாயின் தீமையொன்றும் விளையாமல் ஒருகால் தீரலாம் உண்மை சிறிது கலந்திருக்குங் காலையிற்றான் தீமைவிளைவது திண்ணமாகின்றது. அரைகுறை உண்மை ஆபத்தென்பர். பேரளவிற்கேனும் கற்றவர்என்பவர்களில், கலைகளாற் பயனில்லை என்று கருதும் தொகையினர் மிகச் சிலர். அவ்வண்ணம் கருதுபவர்களிலும் கழறத் துணிபவர் பின்னும் மிகச் சிலரே. மற்று, உரைப்பவர் உரைந்தாலும் அதனை உட்கொள்ள விரையும் எளிமையோர் பாமரர்களல்லாதாரிற் பலர் இரார். ஆதலின் இதனை ஒருவாறு நாம் பொறுத்தாலும் பொறுக்கலாம். மற்று, கலையுணர்வின் மேன்மையில் பற்றுடையராகியும் அக் கலைகளுக்கு வாழ்க்கையில் முதலிடம் அளிக்காமல் பேசுவோர் சொற்களுக்கே நாம் மிகவுஞ் சோர்கின்றோம். பொய்யாய ஒன்றினை மெய்போன்று தோற்றுவிக்கும் மையொன் றிட்டதனைய திறத்தால் இவர்களது கலைமுறையும் காட்டுவழிக்கே அழைத்துச் செல்கின்றது. இதனை விளக்குதற்குத் தக்க உதாரணம் ஒன்று வேண்டுமாயின், சென்ற வாரம் இங்கிலாந்தில் ஓர் கலைக்கழகத் திறப்புவிழாவில் நமது மன்னர் மரபினராய யார்க் பிரபு (The Duke of York) செய்த பிரசங்கத்தில் காணலாம். பத்திரிகைகளில் அப்பிரசங்கத்தின் சுருக்கம் பின் வருமாறு காண்கின்றது:—

"தொழிற்சாலைகள் பெருகிய இடங்களில், வாழ்க்கைவகை மேன்மையடையும்படி செய்கின்ற முயற்சிகள் யாவும், பொதுஜன அமைப்பின்கண் மனிதர்வாழ்க்கை திடமுடன் வளர்ந்து வெற்றியடைவதற்குத் தேகசுகமும் மனத்திருப்தியும் இன்றியமையாதனவாகும் என்னும் நம்பிக்கையுடனே ஆரம்பிக்கவேண்டும். வறுமையும் துன்பமும் அடிப்படையாகக் கொண்டு, நுண்ணிய நாகரிகமொன்றும் அமைக்க இயலாது என்று சொல்லலாம். ஆதரிப்பவர் இல்லாக்கால் கலைகள் செழித்து வளரா. கலைஞர்களைப் போற்றுதற்குச் செல்வவந்தர்கள் நிலைத்திருத்தல் வேண்டும். பொதுஜனங்களனைவரும் குறையற்றுச் சுகமே வாழாக்கால் செல்வமோ ஒருவரிடத்திலும் நிலைத்திருக்காது. நுண்கலைகள் உண்மை நாகரிகத்தின் திண்ணமான அறிகுறிகள் ஆகுமெனநினைக்கலாம். ஒவ்வொரு தலைமுறையும் தன்னுடைய நினைவு நிலைத் திருக்கும்படி நிறுவக் கூடியவைகளில் கலைப்பொருள்களே சிறந்தன. கலைப்பயிற்சியின் பயனைப்பற்றி எவ்வித ஐயமும் இருத்தல் இயலாது. ஜனங்களின் ஒழுக்கத்தை மேன்மையுறச் செய்வதற்குரிய திறமை மிக வாய்ந்தது கலை. ஆகையால், பொதுஜன வாழ்க்கையை நடத்திவைப்பவர் கலைகளைக் காத்து ஊக்க வேண்டும்."

இவ் வாசகத்தி லடங்கிய கருத்துக்கள், கலாநிலயத்துடன் ஒத்து நடப்பனபோல் மேற்பார்வைக்குத் தோன்றலாம். ஆயினும், சிறிது ஊன்றி நோக்குங்கால் அவை முற்றிலும் மாறுபட்டிருக்குந் தன்மை தெரியவரும். ஜனங்கள் குறைவின்றிச் சுகமாக மனத்திருப்தியுடன் வாழ்வதற்குரியமுயற்சிகளைத் தொழில் வளர்ச்சி வர்த்தகம் அரசியல் முதலிய வகைகளிற் செய்து, பிறகு அவர்களது ஒழுக்கம் உயர்வடையும்படி கலைகளைக் கைத்துணையாய் உதவிக் கழைக்க வேண்டும் என்பர் யார்க் பிரபு. குறைவறச் சுகமாயிருப்பதற்கு மனத்திருப்தி வேண்டுமென்பது புதியதன்றெனினும் மறவாது அதனை உரைத்ததற்காக நாம் அவரைப் பாராட்டுகின்றோம். ஆயினும், அப்பிரபு ஒன்று மறந்துவிட்டார். எவ்வளவில் யாவரே மனத்திருப்தி யடைந்திருக்கின்றனர்? ஆதலின் மனத்திருப்தி யாவரும் அடைந்தபின் கலைகளைக் கொண்டு அவர்களது ஒழுக்கத்தை உயர்த்தப் புகலாம் என்பதால் ஏது பயன்? கடலோசை அடங்கிய பின் குளிப்பதற்குக் காத்துநிற்கும் கொள்கையையே போன்றதன்றோ விது. குறைகளைக் குறைப்பதும், மனத்தை நிறைப்பதும், நல்லொழுக்க மல்லாமல் பிறிதொன்றை நினைப்பதற்கும் நேராத நன்னிலையை அளிப்பதும் ஆய இவையனைத்தும் ஒருங்கே புரிவது அருங்கலை யென்னும் உண்மையை அறியாமலோ அயர்ந்தோ யார்க் பிரபுவும், அவர் அனைய பல பெருமக்களும் அவ்வாறு பேசுகின்றனர்! வயிற்றிற்கு வழிதேடுவதே முதற்கருமம் என்று கூறி, ஒழிந்த நேரத்திற்குக் கலைகளையுஞ் சிறிது கைக்கொள்வோம் என்னுமிம் மதி பண்புமுடைத்தன்று, பயனுமுடைத்தன்று. "செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்றறைந்த வள்ளுவ நாயனாரை இச்செவ்வியில் நினைக்குங்கால் எமதுள்ளம் உரைத்தற்கரியதோர் உவகையால் உருகுகின்றது.

யார்க்பிரபு பேசியபின் பார்மூர் பிரபு (Lord Parmoor) பேசுகையில்,

"தொழிலும், தொழிலிற்குரிய பூதசாத்திரங்களும் போதிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் கலைகளுக்கும் கல்சருக்கும் பொதுஜனக் கல்விமுறையில் உளது; மாநட வாழ்க்கையும் செயல்களும் எந்திரங்களேபோல் இப்பொழுது உயிரற்றவைகளாகி வருகின்றன வென்பது பொய்யன்று இவ்வாறு ஆகாமல் தடுப்பதற்குக் கலைகளும் கல்சரும் இடையே நிற்கவேண்டுமென்பது மிகவும் அவசியம்"

என்று கூறினார். ஒரு பிள்ளையின் வலக்கையில் கத்தியையும் இடக்கையில் எண்ணெய்யையுங்கொடுத்து, அக் கத்தியால் குத்திக்குத்திச் செய்கின்ற புண்களை ஆற்றிக்கொண்டிருக்கக் கற்பிக்கின்றது போன்றதோர் மதிஇது அல்லதாயின் வேறெதனை யொக்குமென வினவுதல் முறையே. தொழிற்கல்வியோடு கலையுணர்வும் சமநிலையே பெற்றதெனின் பின்னவ் வாழ்வு தொலைந்தது. தொழிலும் வர்த்தகமுந் தழைப்பதெல்லாம் பழியும்பாவமும் பெருகுவதற்கே வழியாகின்றதென்பதை உணர்வது அருமையன்று. இதனைத் தெரிந்துரைப்பவர் இந்தியர்களுள் எத்தனைபேர் என்பதறியோம். எனினும், தாமஸ் ஹூட் (Thomas

Hood), எலிசபெத் பார்ரெட்பிரௌனிங் (Elizabeth Barret Browning) போன்ற ஆங்கிலப் புலமையோர் சிலர் இவ்வுண்மையைப் பரிவுடன் பகரக் கேட்டிருக்கின்றோம். உலகத்திலுள்ள மாநட கோடிகளனைவர்க்கும் உயிர்வாழ்வதற் காதாரமான தொழில் உழவு ஒன்றே. உழுதுண்டு வாழ்வதற்கியலாத நிலைவந் துற்றதாற் சிலர் வேறுதொழில்களும் வேண்டுமென் றுரைப்பதெல்லாம் பொய். புரியும் பல்வேறு தொழில்களனைத்தும் இறுதியில் நாழி அரிசிக்கேயாதலின், அவரவர்க்கு வேண்டிய அந்நாழியரிசி உழுதலல்லால் பெறுவதற் கில்லையே. ஆகையால் பழுதுடைய பல தொழில்களை இடையிற் செய்துசெய்து கடைசியில் அவ்வரிசியைக் கைகொள்வதைக் காட்டிலும் நேராக அதனை நிலத்திலிருந்தேபெற்றுக்கொள்ளலாமென்னுமிப் பெருமையைச் சிந்திக்குந் திறமையில்லாப் பேதைமை வியப்புடைத்து. உழுதுண்டு வாழ்வதேவாழ்வு, அதனையுஞ் செவிக் குணவில்லாதபோது சிறிது அருந்துக, என்ற மந்திரத்தைக் கற்பிக்கின்ற நம் குருவார் வள்ளுவநாயனாரைக் கும்பிட்டுவழிபடக் கற்றிலாத பாவம் உலகத்தை எக்கதிக்குக் கொண்டு செல்லுமோ என்பதை எண்ணுங்கால் நல்லோர் நெஞ்சம் நடுங்கா தென்செய்யும்!

அப்பர்

8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

[365-வது பக்கத் தொடர்ச்சி]

VII பாடாண்டிணை.

ஒளியும் ஆற்றலும் ஓம்பா வீகையும் அளியு மென்றிவை ஆய்ந்தினி துரைத்தற்கு, தேவார உதாரணம்:—

வானவனைய் வண்மை மனத்தி னானே
மாமணிசேர் வானோர் பெருமா னீயே!
கானவனா யேனத்தின் பின்சென் றானே
கடிய வரணங்கண் மூன்றட் டானே!
தானவனைத் தண்க யிலைமேவி னானே!
தன்னொப்பா ரில்லாத மங்கைக் கென்றும்
தேனவனே! திருச்சோற்றுத் துறையு ளானே!
திகழொளியே! சிவனே! உன்னபைய நானே.

திருச்சோற்றுத்துறை - திருத்தாண்டகம். 7.

சேய்வரல் வருத்தம் வீட வாயில் காவலர்க் குரைத்த கடைநிலைச் செய்யுள்—தேவார உருவகம்.

பரவிப் பலபலவுந் தேடி யோடிப்
பாழாங் குரம்பையிடைக் கிடந்து வாளா
குரவிக் குடிவாழ்க்கை வாழ வெண்ணிக்
குலைகைதவிர் நெஞ்சே! கூறக் கேணீ
இரவிக் குலமுதலா வானோர் கூடி
யெண்ணிறந்த கோடி யமர ராயம்
நிரவிக் கரியவனைத் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 3.

சுற்றிநின் றார்புறங் காவ லமரர் கடைத்தலையில்
மற்றுநின் றார்திரு மாலொடு நான்முகன்வந்தடிக்கீழ்ப்
பற்றிநின் றார்பழனத் தரசேயுன் பணியறிவான்
உற்றுநின் றாரடி யேனைக் குறிக்கொண் டருளுவதே.

திருப்பழனம் - திருவிருத்தம் 2.

மன்பெருஞ் சிறப்பிற் றாவா விழுப்புகழ்ப் பூவைநிலை:—

கூவைவாய் மணிவரன் றிக்
கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவைவாய் முத்திலங்கப்
பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன்
கொல்லேற்றின் கொடியாடை
பூவைகாண் மழலைகாள்,
போகாத பொழுதுளதே.

திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம். 8.

ஒருவனை யவனொடும் ஒழிந்த வானவரோடும் பொருவினன் புகழ்ந்த மற்றதன் *பகுதி:—

சமரமிகு சலந்தரன்போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையொரு கால்குறைத்த நாதர் போலு
நாரணனை யிடப்பாகத் தடைத்தார் போலு
குமரனையு மகனாக வுடையார் போலும்
குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும்
அமரர்கள் பினமுதுணநஞ் சுண்டார் போலு
மடியேனை யாளுடை வடிக டாமே.

திருவீழிமிழலைத் திருத்தாண்டகம். 2.

சந்திரனைத் திருவடியாற் றளர்வித் தான்காண்
டக்கனையு முனிந்தெச்சன் றலைகொண் டான்காண்
இந்திரனைத் தோண்முரிவித் தருள்செய்தான்காண்
ஈசன்கா ணேசன்கா ணினைவார்க் கெல்லாம்
மந்திரமு மறைப்பொருளு மாயி னான்காண்
மாலொடயன் மேலொடுகீ ழறியா வண்ணம்
வெந்தழலின் விரிசுடரா யோங்கி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே.

திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 9.

மண்ணகங் காவல் மன்னவன் முன்னர்
எண்ணியபரிசில் இதுவென உரைத்தல்
பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்த ராகி

* "மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினு
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாள்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னாவினாற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவநாசனின் சீர்கள் பாடவே."

திருவாசகம் - திருச்சதகம் 99.

அரும்பொரு மலர்கள் கொண்டாங்
கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்கு தூபம்
விதியினு லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்ட னூரே.

திருக்கடவூர் வீரட்டம் - திருநேரிசை 4.

புலர்ந்தகால் பூவு நீருங்
கொண்டடி போற்ற மாட்டா
வலஞ்செய்து வாயி னூலால்
வட்டணைப் பந்தர் செய்த
சிலந்தியை யரைய னாக்கிச்
சீர்மைக ளருள வல்லார்
நலந்திகழ் சோலை சூழ்ந்த
நனிபள்ளி யடிக ளாரே.

திருநனிப்பள்ளி - திருநேரிசை 2.

இன்னு ரின்னவை கொடுத்தனர் நீயும்
அன்னர்போலருள்கெனும் இயன்மொழிவாழ்த்து:—

இதற்கு நம்பியாரூரர் தேவாரத்தில் பல உதாரணங்களுள. ஆதலான், அவற்றிற் சில கூறுதும்.

நீளநி னைந்தடியே - னுமை - நித்தலுங்
கைதொழுவேன்
வாளன கண்மடவா - ளவள் -
வாடிவ ருந்தாமே
கோளிலியெம்பெருமான் ! குண்டை -
யூர்ச்சிலநெல் லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவை
யட்டித் தரப்பணியே!

திருக்கோளிலி - நட்டராகம், 1

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்!
தொண்டாடித் திரிவேனைத் தொழும்புதலைக்கேற்
சுந்தரனே ! கந்தமுத லாடையா பரணம் [றுஞ்
பண்டாரத் தேயெனக்குப் பணித்தருள வேண்டும்
பண்டுதான் பிரமாண மொன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர்
கடனாகைக் காரோண மேவியிருந் தீரே !

திருநாகைக் காரோணம் - பண்-கொல்விக் கௌவாணம் 5.

மயலறு சீர்த்தி மான்றோர் மன்னன
இயல்பென மொழியும் அத்துறைப் பகுதி:—

கண்ணுதலாற் காமனையுங் காய்ந்ததிறற் கங்கைமலர்
தெண்ணிலவு செஞ்சடைமேற் றீமலர்ந்த கொன்றை
[யினுன்
"கண்மணியை மறைப்பித்தா யிங்கிருந்தாயோ "?
[வென்ன
ஒண்ணுதலி பெருமானு ருளோம்போகீ ரென்றானே.

"செய்வினையொன் றறியாதேன்
திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும்
பொறுத்திடநீ வேண்டாவோ?
பையரவா! விங்கிருந்தா யோ?"
வென்னப் பரிந்தென்னை
உய்யவருள் செய்யவல்லான்
"உளோம், போகீர்!" என்றானே!

(சுந்தரர்) திருவெண்பாக்கம் - பண் - சீகாமரம் 3 & 6.

கடுந்தேர் மன்னவன் கண்படைநிலை:-தேவாரத்தில் துயில்விக்கும்* நிலைக்கு உதாரணம்.

விரும்பினேற் கெனதுள்ளம் வீடகிலா விதியே![தும்
விண்ணவர்தம் பெருமானே! மண்ணவர் நின்றேத்
கரும்பே! யென் கட்டியென் றுள்ளத்தா லுள்கிக்
காதல்செய் மாதரார் கங்கையா ளங்கை
வரும்புனலுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும்
வரியரவு முடன்றுயில் வைத்தருளு மெந்தை!
இரும்புனல்வந் தெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே
(சுந்தரர்) திருவதிகை வீரட்டானம் - பண் - கொல்லிக்
[கௌவாணம் 3.

அயில்வேன் மன்னனை அருளிய வெழுகெனத்
துயிலிடை யெடுப்பிய துயிலெடை நிலை:—

இன்னிசை வீணைய ரியாழின ரொருபா
லிருக்கொடு தோத்திர மியம்பின ரொருபாற்
றுன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
றொழுகையர் ழுகையர் துவள்கைய ரொருபாற்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபாற்
றிருப்பெருந் துறையுறை சிவபெரு மானே !
யென்னையு மாண்டுகொண் டின்னருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

திருவாசகம் - திருப்பள்ளியெழுச்சி 4.

கங்குற் கனைதுயி லெழுந்தோன் முன்னர்
மங்கலம் கூறிய மங்கல நிலை.

செங்கயல் சேல்கள் பாய்ந்து தேம்பழ மினிய நாடித்
தங்கயந் துறந்து போந்து தடம்பொய்கை யடைந்து
[நின்று
கொங்கையர் குடையுங் காலைக் கொழுங்கனி யழுங்கி
[னாம்
மங்கல மனையில் மிக்கார் வலம்புரத் தடிக ளாரே.

திருவலம்புரம் - திருநேரிசை 7.

இனதளவி லிவனதடி யிணையுமுடி
யறிதுமென விகலு மிருவர்
தனதுருவ மறிவரிய சகலசிவன்
மேவுமலை தன்னை வினவில்
புனவர்புன மயிலனைய மாதரொடு
மைந்தரு மணம்பு ணருநாள்
கனகமென மலர்களணி வேங்கைக
ணிலாவுகா ளத்தி மலையே

சம்பந்தர்.

[குறிப்பு—"கங்குற் கனைதுயி லெழுந்தோன்" என்னும் தொடர்மொழி சிவபெருமானுக்கு உருவகத் திலமையாது. ஆயினும் அவர் முன்னர்ச் சந்ததமும் "நீரிடைத் துயின்ற" திருமா லிருப்பதால், கங்குல் கனைதுயி லெழுந்தோன் முன்னர் மங்கலம் கூறிய மங்கலநிலை அமைக்கப்பெறும்:—

நீரிடைத் துயின்றவன் றம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்னது மான்றொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தவெம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே.

சம்பந்தர்.

* மாசிலொள்வாள்போன் மறியுமணிநீர்த்திரைத்தொகுதி
ஊசலை யாடியங் கொண்சிறை யன்ன முறங்கலுற்றூர்
பாசறை நீலம் பருகிய வண்டுபண் பாடல்கண்டு
வீசுங் கெடில வடகரைக்கே யெந்தை வீரட்டமே.

திருவதிகை வீரட்டானம் - திருவிருத்தம் 1.

குறுந்தொகை.

[376-வது பக்கத் தொடர்ச்சி]

வெள்ளிவீதியார்] 58 [குறிஞ்சி

தனது பாங்க னுதவியால் தலைவியைப் பெறவிரும்பி அவனுக்கு உற்றதை உணர்த்திய தலைமகனை, அவன் 'இது உனக்குச் சிறிதும் தகாது; இவ்விருப்பத்தை விட்டொழி' என்று இடித்துரைத்தபோது தலைமகன் தானுற்ற காம நோய் தாங்கவொண்ணாததென்று சொல்லியது.

இடிக்குங் கேளிர், நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்லை;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய்; நோன்றுகொளற் கரிதே.

(உரை). இடித்துரைக்கும் நண்பினரே, (எனது குறையை) உமது குறையாக (க்கருதி அதனை முடிப்பீர் என்று) எண்ணி இதுகாறும்(எனதுயிரைப் போகாது தடுத்து)நிறுத்தினேன். (இவ் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பது அன்றி எனக்கு நீர் செய்யும்) நன்மை வேறொன்றுமில்லை. சூரியன்வெயில் எறிப்பதால் வெப்புற்ற பாறையின்மீது வைக்கப்பட்டு, இரண்டுகையு மில்லாதவனும் ஊமையனுமாகிய ஒருவனுற் கண்பார்வையால்மட்டும் காக்கப்படும் காய்ந்து உருகியோடிய வெண்ணெயைப்போல இக் காமநோய் என்னுடலெங்கும் பரவிவிட்டது. இனிப் பொறுக்கமுடியாது.

இடித்தல் - இடித்துரைத்தல்; கண்டித்துப் புத்திசொல்லல். கேளிர் - அண்மைவிளி. வெவ்வறை -வெம்மையாகிய அறை. அறை - கற்பாறை. வெண்ணெய் உணங்கல் - காயவூற்ற வெண்ணெய். பரந்தன்று-பரவியது. நோன்று கொளல் - பொறுத்துக்கொள்ளல்.

கற்பாறையின்மேல் வைத்த வெண்ணெய்த்திரள் வெயிலின் வெப்பத்தால் உருகியோடி எங்கும் பரந்துவிடுவதைப்போலத் தன்மனத்தைப்பற்றிய காமநோய் உடலெங்கும் கலந்து வெதுப்பி நலிகின்றது என்பான், 'ஞாயிறு காயும் வெவ்வறைமருங்கில் வெண்ணெய்உணங்கல்போலப் பரந்தன்று இந்நோய்'என்றும், அதுதான் தன்னாலும்தீர்க்க முடியாது பிறராலும் பரிகரிக்கப்படாது தனது உயிரைப் பற்றி வருத்துகின்றதென்பான், 'கையிலூமன் கண்ணிற் காக்கும் வெண்ணெய்போல' என்றும் கூறினான் என்க. வெண்ணெய் வெயிலால் உருகிச் சிதையக்கண்டும்,கையற்றவனாகையால் தானே அதை எடுக்கமுடியாமலும், ஊமனாகையால் பிறரை அழைத்து அவரைக்கொண்டு காக்கமாட்டாமலும், தவிப்பானாதலின், தனித்து வருந்தும் தன்னிலைக்குக் கையிலூமன் கண்ணிற்காக்கும் வெண்ணெய் பரத்தலை உவமை கூறியநயம் காண்க.

மோசிகீரன்] 59 [பாலை

பொருள்கருதிச் சேணகன்ற தலைமகன் பிரிவைஆற்றாது வருந்திய தலைவிக்கு, 'அவர்நெடி துன்னைவிட்டுப் பிரிந்திருக்கத் தரியார்; உன்னை நினைந்து விரைந்து திரும்பிவிடுவார்' என்றுகூறி அவளைத் தோழி தேற்றியது.

பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அதலைக் குன்றத் தகன்சுனைக் குவளையொடு
பொதிந்த குளவி நாறுநின் னன்னுதல்
தாவெனல் மறப்பரோ? மற்றெனு முயலவும்?
சுரம்பல விலங்கிய; அரும்பொருள்
நிரம்பா; ஆகலின் நீடலோ இன்றே.

(உரை). பதலை என்னும் பறையின் கொட்டோடு பாட்டைப்பாடிப் பரிசில் பெறவிரும்பும் பாணர்களுக்கு வேண்டியவற்றைஈயுந்தலைவனாகிய அதலையென்பானுடைய குன்றிடத்துள்ள அகன்ற சுனையிற் பூத்த குவளைமலர்களோடு இதழ்கள் நெருங்கிய மலைமல்லிகை மலர்களையும் (கண்டால், அவற்றை) நெருங்கச்சேர்த்துத் தொடுத்துத் தான் முன் சூட்டிய நினது நல்லநுதல் தனது பிரிவால் இப்பொழுது பசந்து அழகுகெடும் என்பதை மறப்பரோ? அன்றியும் பொருள்கூட்ட முயல்வதினால் என்ன பயனுண்டாம்? (செல்லும் வழியில்) பல பாலைவனங்கள் குறுக்கிட்டுத் தடுக்கும்; ஈட்டக்கருதிய அரிய பொருளும் (நினைத்தபடி விரைவில்) நிரம்பக் கைகூடாது; ஆகையால் அவரது பிரிவு நீட்டிக்காது.

பதலை - ஒருவகைச் சிறுபறை. பாணி - பாட்டு, இசை. பரிசிலர் - இரவலர். அதலை - அக்காலத்திருந்த ஒருவள்ளல் போலும். தா - கேடு, அழகழிதல் தாவென - தாவுறுமென, கேடுறுமென. என்று ஒருசொல் வருவிக்க. எனல் - என்பதை. மற்றுஎன்னும் முயலவும் - தலைவியின் அழகுகெட்டு அவளுக்குத் தீங்குவருமாயின், ஈட்டிய பெருளாற் பின் பயனென்னை? விலங்கிய - குறுக்கிட்டுக் கிடந்தன; 'விலக்கிய' என்றுமாம்.

பரணர்] 60 [குறிஞ்சி

தனது தமரால் இற்செறிக்கப்பட்டமையால் குறியிடத்துச் சென்று தலைமகனைக் காணப்பெறாத தலைமகள் தோழிக்கு வருந்திச் சொல்லியது.

குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருகை முடவன்
உட்கைச் சிறுடை கோலிக் கீழிருந்
தூட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவா ராயினும்
பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே.

(உரை). குறுகிய காலையுடைய கூதளிச்செடிகள் காற்றால் அசைந்தாடும் நெடிய வரையினுச்சியில் பெரிய தேனிறாலைக் கண்ட இரண்டு கையுங்காலும் முடங்கிய முடவன் தனது சிறிய உடையை அரையிலே சுற்றிக்கொண்டு அம்மலையினடியிலிருந்தபடியே (அத்தேனிறாலை அண்ணாந்து பார்த்துக் கொண்டு தனதுவெற்று) உள்ளங்கையை வாயாற் கவ்வி நாவால் நக்கி இன்புறுமாறுபோல, காதலர்தாம் என்னிடத்து அருளிலராயினும், என்கண் அன்பிலராயினும், (அவரை நான் கூடப்பெறாவிடினும்) அடிக்கடி கண்ணாலேனும் காணப்பெறவேனுயின், அதுவே என்னுள்ளத்தை மகிழ்விக்கும்.

கூதளி - கூதாளி. உட்கை - உள்ளங்கை. ஊட்டுபு - ஊட்டி, கவ்வியுண்டு. நல்குதல் - அருளுதல். நயத்தல் - விரும்பல்.

காலில்லாமையால் மலைமீதேறவும், கையில்லாமையால் தேனிறாலை வாங்கவும் மாட்டாத முடவனது நிலையை, வீட்டை விட்டு வெளிச்செல்லவும் தலைவனைத் தழுவிக் கூடவும் பெறாது வீட்டகத்தே காவல் செய்யப்பட்ட தன்னிலைக்கு உவமையாகக் கூறினாளாம்.

தும்பிசேர் கீரன்] 61 [மருதம்

தான் நெடுநாள் பரத்தையிற்பிரிந்து தங்கியதால் ஊடிய தலைமகளது ஊடலைத் தணிக்கும்பொருட்டுத்

தலைமகன் அனுப்பிய வாயில்களை நோக்கித் தலைவி வெறுத்துக் கூறியது.

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறா ராயினுங் கையின்
ஈர்த்தின் புறாஉ மிளையோர் போல
ஊற்றின் புறேஎ மாயினும் நற்றேர்ப்
பொய்கை யூரன் கேண்மை
செய்தின் புற்றனெம், செறிந்தன வளையே.

(உரை) தச்சன் செய்த சிறிய குதிரைகட்டிய தேரை ஊர்ந்து இன்பம் பெறாவிடினும், அதனைக் கையால் இழுத்தாவது மகிழ்வுறும் சிறுபிள்ளைகளைப் போல, யாமும் நல்ல தேரையும் பொய்கையையுமுடைய ஊரனாகிய தலைவனை அடைந்து மெய்யுறக்கூடி இன்புறப் பெறேமாயினும், அவன் எம்மிடத்து அன்புவைத்துள்ளான் என்பதை உம் வாயிலாகக் கேட்டறிந்ததினால் இன்புற்றேம்; இனி (அவன் பிரிவால் மெலிந்த கைகள் அம்மெலிவு நீங்கி, (முன் கழுவலுற்ற) கைவளையல்கள் கையினிடத்துச் செறிந்து தங்கலுற்றன.

மா - குதிரை. வையம் - தேர். கேண்மை - அன்பு, நட்பு. செய்து-செய்ய. 'நற்றேர்ப்பொய்கை ஊரன்' என்றமையால் அவன் காமப்பரத்தையரைத் தேர்மீதேற்றிச் சென்றுப் பொய்கைகளில் நீராடல்புரியுந் தன்மையனென்று அவனைக் குறிப்பால் இழித்துக் கூறியதாம். 'இன்புற்றனெம்', 'செறிந்தன வளையே' என்னுங் குறிப்பு மொழிகள் 'வருந்தினேம்', 'வளைகள் கழன்று வீழ்ந்தன' என்னும் பொருள் பயந்துநின்றன.

'கேண்மை செய்து' என்பதற்கு 'மனைவி யென்னும் முறையில் நின்று அவனுக்குத் தான் செய்யும் உரிமைகளையெல்லாம் செய்தொழுகி' என்றுரைத்து, 'இன்புற்றனெம்', செறிந்தன வளையே' என்பவற்றைக் குறிப்பு மொழியாகக் கொள்ளாது நேரே கொள்ளலும் ஒன்று. 'இன்புறேம்' 'இன்புற்றனெம்' என்றது தலைவி தோழியையும் தன்னோடு உளப்படுத்திக் கூறியதாம்.

சிறைக்குடி ஆந்தையார்] 62 [குறிஞ்சி

இயற்கைப்புணர்ச்சிக்குப் பின்னர் தலைமகன் அதே யிடத்தில் தனியேவந்திருந்த தலைமகளைத் தான் எதிர்ப்பட்டபோது அவளைக் கூடவிழைந்த தன்னெஞ்சுக்குச் சொல்லியது.

கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைபட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறியள், நல்லோண் மேனி
முறியினும் வாயது, முயங்கற்கு மினிதே.

(உரை). காந்தளினது மலருஞ் செவ்வி அரும்பையும், பசிய முல்லையின் மலரையும் வாசனையுள்ள இதழ்களையுடைய குவளைமலரோடு இடையிடையே கலந்து அழகு பெறத் தொடுத்தலால் மாட்சிமைபட்ட மாலையைப்போல நறு மணத்தையுடைய நல்லாளாகிய இவள்மேனி (மாவின்) தளிரைக்காட்டிலும் வாய்ப்புடையது; ஆதலின் முயங்குவதற்கும் இனியதே.

எதிர் முகை - மலரும் பருவத்தை எதிர்பார்க்கும் அரும்பு. வீமுல்லை - முல்லை வீ. வீ - பூ. விரைஇ - விரவி, கலந்து. ஐது-அழகியது. முறி-தளிர், அழகிய பெண்களின் ஒளிவீசு மேனிக்கு மாந்தளிரையும் அசோகந்தளிரையும் உவமை கூறுவது கவிமரபு. 'நறியள்' என்றது உத்தமசாதிப் பெண்கள்தம் உயிர்ப்பும் கூந்தலும் இயற்கை நறுமணம் உடைமை பற்றி.

உகாய்க்குடி கிழார்] 63 [பாலை

பொருளீட்டுஞ் செயலில் தன்னை மேன்மேலும் தூண்டி வலிக்குந் தன்னெஞ்சை நோக்கித் தலைமகன் கூறியது.

ஈதலுந் துய்த்தலும் இல்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி; அவ்வினைக்
கம்மா, அரிவையும் வருமோ?
எம்மை யுய்த்தியோ? உரைத்திசி னெஞ்சே.

(உரை). (வறியவராய்த் தம்மை இரக்கும்) பிறருக்குக் கொடுத்தலும், அனுபவித்தற்குறிய இன்பங்களைத் தாம் அனுபவித்தலும், பொருள் இல்லாதவர்க்கு இயலாவென எண்ணி, எனது நெஞ்சே, நீ (மிக்கபொருளை) ஈட்டுந் தொழில்களை அதிகமாகக் கருதி அம்முயற்சியில் என்னை ஏவுகின்றாய். அப்படிக்காயின்; யான் சொல்லும் இதனைக் கேட்டு எனக்குப் பதில் சொல்லுவாயாக; அச்செயல் குறித்து நான் செல்லும்போது என் காதலியும் என்னுடன் வருவாளோ; அல்லது, என்னைமட்டும் தனித்தேகச் செய்வையோ? யாது உன்கருத்து?

கைம்மிக - அளவு கடக்க. உரைத்திசின் - உரைப்பாய்; இசின் - அசைநிலை, முன்னிலைப் பொருளின்கண் வந்தது.

கருவூர்க் கந்தப்பிள்ளைசாத்தனார்] 64 [முல்லை

சேணிடை அகன்ற தலைமகன் குறித்தகாலத்தில் வாரானைப் பிரிவாற்றாது வருந்திய தலைமகள், 'நின்காதலர் இனித் தாழாது விரைவின் வந்துவிடுவார்; நீ வருந்தாதே' என்று தன்னை ஆற்றுவித்த தோழிக்குச் சொல்லியது.

பல்லா நெடுநெறிக் கன்று வருந்தெனப்
புன்றலை மன்றம் நோக்கி மாலை
மடக்கட் குழவி யவண்வந் தென்ன,
நோயே மாகுத லறிந்தும்
சேயர், தோழி, சேய்நாட் டோரே.

(உரை). புல்லுள்ள இடங்களில் மேயச்சென்ற பசுக்கள் ஊரின்கண் விட்டுப்பிரிந்த தமது கன்றுகள் வருந்துமென நினைத்து அந்திநேரத்தில் புல்லியதான இடத்தையுடைய ஊர்மன்றத்தை நோக்கி அறியாமையைக்காட்டும் கண்களையுடைய இளங்கன்றுகள் இருக்குமிடத்திற்கு வந்தன; தூரமான நாட்டிடைச் சென்றுள்ள காதலர் (நாம் பிரிவாற்றாது துயருற்று வருந்துவேம் என்று அறிந்திருந்தும் நமது நோயைத் தீர்க்க வந்திலர்); சேயராகி அங்கேயே தங்கிவிட்டார். (அவர் நம்மிடத்து அன்பிலர் போலும்.)

வருந்தென - (விகாரம்) வருந்துமென புன்றலை - மேய்வதற்குப் புல்லில்லாத வெற்றிடம். மன்றம் - மன்று, மாடுகளைகட்டும் ஊர்ப் பொதுவிடம்; 'தாதெருமன்றம்' (சிலப்ப - கொலைக்கள - 102) என்றார் பிறரும். மாலை - மாலைப்பொழுதில். குழவி - இளங்கன்று. சேயர் - (குறிப்பு வினைமுற்று) தூரத்தே உள்ளாராயினர். வந்தன்ன - வந்தன (விரித்தல் விகாரம்).

கோவூர் கிழார்] 65 [முல்லை

இதுவும் அது

வன்பாற் றெள்ளறல் பருகிய இரலைதன்
இன்புறு துணையொடு மறுவந் துகளத்
தான்வந் தன்றே தளிதரு தண்கார்,
'வாரா துறையுநர் வரனசைஇ
வருந்திநொந் துறைய இருந்திரோ?' எனவே.

(உரை). மலையிடத்துள்ள (சுனையின்) தெளிந்த நீரைக் குடித்த கலைமான் இன்புறுதற்குரிய தனது பிணையோடு

சேர்ந்து துள்ளி விளையாடுமாறு, மழைத்துளிகளைச் சிந்தும் குளிர்ந்த கார்காலம், 'இன்னும் மீளாது (உம்மை விட்டுப் பிரிந்து அன்னிய நாட்டில்) உறையுங் காதலர் வருகையை விரும்பி (நீங்கள் இதுகாறும்) மனம் நொந்து (துயருற்று) வருந்தி (தனியே) இங்கிருந்திரோ' என்று வினவிக் கொண்டு வந்தது.

வன்பால் - வன்மையான நிலம், அஃதாவது மலையிடம். அறல் - நீர். மறுவந்து - சேர்ந்து, கூடி. தளி - நீர்த்துளி. வரனசைஇ - வரல்நசைஇ, வருதலை விரும்பி. எனவே - என்று கேட்டுக் கொண்டு. 'எனவே தண்கார் வந்தன்று' எனக் கூட்டுக.

இறைச்சி:—மலைமேற் சென்று சுனைநீரைப்பருகி நீர் வேட்கை நீங்கிய மான் விரைந்துமீண்டு தன் பிணையொடு கூடிக்களிக்குங் கார்காலம் வந்தது என்றமையால், அயலூடு சென்று அரும்பொருளீட்டிப் பொருள்வேட்கை தணிந்த தலைமகன் தன்னுடன்கூடி இன்புற்று மகிழுமாறு இன்னும் வந்திலன் என்று குறித்துத் தலைமகள் வருந்தினாள் என்க.

கோவத்தன்] 66 [முல்லை

தலைமகன் வருவதாகக் குறித்துச்சென்ற கார்காலம் வரக் கண்டும் அவன் வாராமையால் வருந்திய தலைமகளுக்குத் தோழி, 'இது உண்மையில் கார்காலம் அன்று; இது வம்ப மாரியே' என்றுசொல்லித் தேற்றியது.

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை;
கற்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை, நெரிதரக்
கொம்பு சேரக் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே.

(உரை). குன்றுகள் செறிந்த சுரத்திடைச்சென்ற காதலர் குறித்த கார்காலம் வாராதிருக்கவும், பருத்த அடியையுடைய கொன்றைமரங்கள் (காலமல்லாக் காலத்துப் பெய்யும் இந்த) நிலையற்ற மழையைக் கார்காலத்து மழையெனக் கருதி நெருக்கமாகத் தங் கிளைகளைச் சேரச் சாஞ்சரமாகப் பூங்கொத்துகளைப் பூக்கவிட்டன. ஆகையால், உண்மையாக அவைகள் அறியாமையை உடையனவாம்.

மடவ - மடமைத்தன்மையை உடையன; மடமை - அறியாமை. தடவு - பெருமை. அத்தம் - அருஞ்சுரம்; காட்டுவழியுமாம். வாரா அளவை: அளவை - காலம், சமயம். கொடியிணர் - மாலை மாலையாகத் தொங்கும் பூங்கொத்து. கொன்றையின்பூக் கொடிபோலச் சாஞ்சரமாகத் தொங்குமென்பதை

ஆய்பொன் னவிரிழை தூக்கி யன்ன
நீடிணர்க் கொன்றை (364)

என்ற அகப்பாட்டான் அறிக. வம்பமாரி - நிலைத்துப் பெய்யாது சிறிதுநேரம் பெய்து நின்றுவிடும் மழை; (the occasional passing showers, not the regular seasonal rains.) வம்பு - நிலை யின்மை.

ஏதில பெய்ம்மழை காரென மயங்கிய
பேதையங் கொன்றைக் கோதைநிலை நோக்கி
எவனினி மடந்தைநின் கலிழ்வே. (ஐங்குறுநூறு 462)

என்ற பாட்டை இதனோடு ஒப்பு நோக்குக.

அள்ளூர் நன்முல்லையார்] 67 [பாலை

தலைமகன் தன்னைவிட்டுப் பிரிந்துழி ஆற்றாது வருந்திய தலைமகள் தோழிக்குக் கூறியது.

உள்ளார் கொல்லோ, தோழி, கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப வொண்பழம்
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல வொருகா சேய்க்கும்
நிலங்கரி கள்ளியங் காடிறந் தோரே.

(உரை). தீயால் நிலம்வெந்து கருகிய கள்ளிகள்செறிந்த சுரத்தைக்கடந்து சென்றவராகிய காதலர், அக்காட்டிடைக் கிளி தனது வளைந்தவாயிற் கவ்விய ஒள்ளிய வேப்பம்பழம் புதிய சரட்டிற் கோப்பதற்குப் பெண்கள் தமது கூர்மையான நகம்பொருந்திய விரல்களால் பிடித்தப் பொற்காசு மாலையின் ஒரு காசைப்போலத் தோன்றும். (அதைக் கண்டதனால் அக் காசுமாலையை மார்பிலணிந்த) நம்மைப் பற்றி அவர் நினையார்கொல்லோ? (நினைந்திருப்பாராயின் உடனே மீளாதிரார்.)

உள்ளார் - நம்மை நினையார். வளைவாய்-வளைந்த மூக்கு. நாண் - பொற்சரடு அல்லது கயிறு. நுழைப்பான் - நுழைவிக்கும் பொருட்டு. 'நுதிமாண் வள்ளுகிர்' என்னும் மொழிக்குமுன் 'பெண்களின்' என்பது வருவித்து உரைக்கப்பட்டது. கிளியின் மூக்கும் பெண்களின் நகமும் செவந்திருக்கும் ஒப்புமை நயங்கருதி. இவ்வாறன்றி, 'நுழைப்பான்' என்பதற்குப் பொற்கம்மியனென்று உரைத்து நுழைப்பான் வள்ளுகிர், என நேரே ஒரு தொடராகவும் கொள்ளலாம். பொலங்கலம் - பொன்னாற் செய்த அணி; இங்குக் பொற்காசுமாலை. 'பொன்' என்பது

பொன்னென் கிளவி ஈறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்,
செய்யுண் மருங்கில் தொடரிய லான.

என்ற தொல்காப்பிய விதியால் (எழுத்ததிகாரம் - புள்ளி மயங்கியல்-62) 'பொலம்' என்றாயிற்று. காசு-பொன்காசு. கரிகாடு-கரிந்தகாடு (வினைத்தொகை). இறந்தோர், கடந்து சென்றோர்.

வேப்பமரம் பாலையிடத்த தென்பதை, ஐங்குறுநூற்றுப் பாலைப் பகுதிக்கண் தலைவியிரங்கு பத்தில்,

குறுஞ்சினை வேம்பின் நறும்பழ முணீஇய
வாவ லுகக்கு மாலையும்
இன்றுகொல் காதலர் சென்ற நாட்டே. (339)

என்ற பாட்டால் அறிக.

கிளி தனது செவந்த கூரிய மூக்கால் கவ்விய ஒள்ளிய வேப்பம்பழம், புதியசரட்டிற் கோப்பதற்காகப் பெண்கள் தமது செவந்த கூர்மையான நகத்தை நுனியிலுடைய பெருவிரலாலும் சுட்டுவிரலாலும் இறுகப் பிடித்த பொற்காசுபோலத் தோன்றும் என்ற கற்பனையின் நயம் பாராட்டத் தக்கது.

ஒட்டக்கூத்தர் பாடிய

தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம்:—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[366-வது பக்கத் தொடர்ச்சி]

முதல்பத்து—நாலாம் பதிகம்

8-ம் பாசுரம்

நீயலையே சிறுபூவாய்! நெடுமாலார்க்கு என் தூதாய்
நோயெனது நுவலென்ன நுவலாதே இருந்தொழிந் [தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான் இனிஉனது
வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே.

குறிப்பு:-நெடுமாலார்-எனக்கு அரியனாகிருக்கும் பொருட்டே நெடுந்தூரத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலார். கிளி போகாதிருக்கவே தான் வளர்த்த பூவையைப் (நாகணவாய்ப்புள், ஸாரிகை) பார்த்து "முன்னமேயே என்னுடையவருத்தத்தை மாலார்க்கு உணர்த்தச் சொன்னேன். நீ நுவலாது வாளா இருந்துவிட்டாய். என் சோபையோ போய் உயிரானது முடியும் நிலைக்கு வந்துவிட்டது. உனக்குப்பாலன்னம் ஊட்டி ரக்ஷிப்பவரைத் தேடிக்கொள்" என்று உரைக்கிறாள். சிறுபூவை - தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்ளக்கூடாத இளம்வயதுள்ள பூவை

9-ம் பாசுரம்.

நாடாத மலர்நாடி நாள்தோறும் நாரணன்தன்
வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று
வீடாடி வீற்றிருத்தல் வினையற்ற தென்செய்வதோ?
ஊடாடு பனிவாடாய்! உரைத்தீராய் எனதுடலே?

கருத்துரை:—தன்னை நலிகின்ற வாடைக்காற்றை நோக்கி "நீ அங்கும் இங்கும் ஊடாடிச் செல்கின்றாய். நீ என் விடுதூதாய் நாரணன்பால் சென்று உயர்ந்த நன்மலர்களைக்கொண்டு அவர்தம் திருவடிமலர்களை அடைந்து என்றைக்கும் பூஜிக்க உரித்தாயிருக்க வேண்டிய அடியேன் அவற்றினின்றும் யான்பெறுதற்குரிய பெரும்பேறான அந்தப் பாக்கியம் இல்லாமல் போய்த் தனிமையாக (வீடு) அவனைப் பஜித்திருக்க என்ன புண்ணிய கருமங்களைச் செய்திருக்கிறேன்- "என்னைக்கொண்டு என்ன செய்வது" என்று சொல்வாய். என் ஸ்வாமி ஒரு ஆதரவான மாற்றமும் உரைத்து என்னை ஆச்வாஸப்படுத்தாவிட்டால் வாடைக்காற்றே, நீ அவரிடமிருந்து திரும்பிவந்து என்னை (ஈராய்) கொன்றுவிடு" என்கிறார்.

குறிப்பு:—வாடை உலகமெங்கும் திரிவதால் "அவன் வாடக்காற்றை ஏவி நலிகிறானென்ற அர்த்த தொனி மறைந்து கிடக்கின்றது. என் நலிவுகூட அவனுக்கு இஷ்டமாகில் அவனிடமிருந்து பேசிவந்த பிறகு நலிவு செய்". "உரைத்து ஈராய்" என்றதினால், "அவனிடத்தில் பேசியபின் அவன் நிராதரவு செய்வானாயின் வாடைக்காற்றே, நீ இஷ்டப்படி நலிவு செய்யலாம்" என்கிறாள்.

10-ம் பாசுரம்.

உடலாழிப் பிறப்பு வீடுயிர் முதலா முற்றுமாய்
கடலாழி நீர்தோற்றி யதனுள்ளே கண்வளரும்
அடலாழி யம்மானைக் கண்டக்கா லிதுசொல்லி
விடலாழி மடநெஞ்சே வினையோ மொன்று மளவே.

பதவுரை.

ஆழி - ஆழ்ந்த, மட-அவன் விஷயத்தில் தாழ்ந்த, நெஞ்சே - என் மனமே, உடல் - தேஹம், ஆழிப் பிறப்பு - சக்கிரம்போல் சுழன்று 'தேவ மனுஷ்யாதி ரூபமாய் மாறிமாறிப் பிறந்து, வீடு - கிரஹம் அதாவது தேஹம், உயிர்-ஆத்மா, முதலா- அவைகளாய், ஸூக்ஷ்மமான ஆத்மாவாகவும் ஸ்தூலமான தேவ மனுஷ்யாதி அசித் வஸ்துவாகவும், முற்றுமாய்-மற்று எல்லா ஜகத் வஸ்துவுமாய், கடல் ஆழி நீர் தோற்றி- ஜகங்களைப் படைத்து அவற்றின் ரக்ஷணத்தின்பொருட்டு ஆழ்ந்த பாற்கடலில், கண்வளரும் - துயில்கின்ற, அடல் - பராக்கிரமம் பொருந்திய, ஆழி அம்மானை-சக்ராயுத ஆழ்வாரைத் தரித்துக்கொண்டிருக்கிற எம்பெருமானை, கண்டக்கால், இது-முன் பாசுரத்தில் செப்பிய தூதுவாக்கியம் "வினையற்றதென்செய்வதோ-நல்ல பாக்கியம் பெறாத நான் என்ன பிரயோஜனம் செய்வதற்கு" என்று சொல்லி, வினையோம் - பாபத்தை செய்த யாம், ஒன்றும் அளவே-அவனிடம் கலப்பு வாய்க்குமளவும், விடல் - என்னை விட்டுப் போகாதே.

குறிப்பு:-இதுவரை, வெளியுள்ள சாதனங்களைக் கொண்டு தூது அனுப்ப முயன்ற ஆழ்வார் அவைகள் பயன்படாது ஒழிந்தநிலையில் தன் மனத்தைக் குறித்து "நீ வேதாந்த தத்துவங்களை உணர்ந்திருக்கிறாய் காண்! அவனுடைய ஸம்ஸ்லேஷம் (கூடுதல்) கிட்டும்வரையும் "என் தேகயாத்திரை உன்பொருட்டுப் பிரவர்த்திக்கே உரித்தாயிருப்பதொன்று. உன்னுடன் ஒன்றுசேர்ந்து அதன் புருஷார்த்தத்தை அநுபவியாமல் இருப்பது என்ன பிரயோஜனம்" என்று விண்ணப்பம்செய்து என்னையும் அவனையும் விடாதே" என்று தம் திருவுள்ளத்தைத் தேற்றுகின்றார்.

11-வது பாசுரம்.

அளவியன்ற வேழுலகத்
தவர்பெருமான் கண்ணனை
வளவயல்சூழ் வண்குருகூர்ச்
சடகோபன் வாய்ந்துரைத்த
அளவியன்ற வந்தாதி
யாயிரத்துள் இப்பத்தின்
வளவுரையால் பெறலாகும்
வானோங்கும் பெருவளமே.

உரை:—அளவிடக் கூடாத மஹிமையுடையனாய் ஸர்வலோகங்களுக்கும் ஈசனாய் ஆச்ரிதருக்குச் சுலபனாயிருந்த வெம்பெருமானைக் கருதிப்பேசுகிற அளவில்லாத மஹிமையை யுடையதாகிய இத்திருவாய்மொழியை அழகாகச் சொல்லவல்லார் திருநாட்டிலே சென்று பகவானுக்கு வழிபட்டுச் செய்யும் ஸகல தாஸ்ய விருத்தியாகிற பெரும்பேறான சம்பத்தை அடைவார்கள். இந்தத் தசகத்தின் பொதுநோக்கம், பகவான் பக்தர்களுடைய அபராதங்களை ஸஹிக்கிய்வன்-எப்பிழை செய்யினும் அவன் தகவு (கிருபை) காத்து ரக்ஷிக்கும். "அபராத ஸஹத்துவம்" என்ற

பகவத்குணம் இப்பத்துக்கு விஷயம். அதையே பற்றுக்கோடாகக் கொண்டு ஆழ்வார் பலவிதமாய் எம்பெருமானுக்குத் தூதுவிடுகிறாரென் றறியத்தக்கது. ஸ்ரீமத் வேதாந்ததேசிகன், "அஞ்சிறை யமடநாராய்" சுவாபதேசத்தில் எளிதாகக் கிட்டக்கூடிய அசார்யர்களென்றும், "இளங்குயில்காள்" என்றது மங்களவாக்குக்களுடைய ஆசார்யர்களாகவும், "பாலையும் நீரையும் பிரிக்கவல்ல மென்னடைய அன்னங்காள்" ஸாராஸாரா விவேகம் செய்து சாச்வதமான நன்னடை யுடைய ஆசார்யர்களென்றும், "நீல அன்றில்கள்" கிருஷ்ணஸாரூப்பியம் பெற்றதினாலே ஸௌமியராயிருக்கிற ஆசான்களாகவும், "குஞ்சுகளுக்கு இரைதேடும் குருகுகளை"ப் பகவானைத் தாரகபோஷக போக்கிய வஸ்துவாகத் தாமும் அநுபவித்து வர்த்தித்தும், தங்கள் மனோ நிஷ்டையைப் பிறபக்தர்களுக்கும்ஊட்டும் மஹாத்மாக்களான ஆசாரியர்களாகவும், "ஆழிவரி வண்டு" என்பதால் வைஷ்ணவ சின்னங்களைத் தங்கள் அங்கத்தில் தரித்துத் தாஸ்யரசத்தில் ஈடுபாடுள்ள குருக்களாகவும், "இளங்கிளி" தங்கள் மாஹாத்மியத்தைப் பிறர்கண்டாலேதெரிந்துகொள்ளக்கூடிய மஹான்களாகவும், "சிறுபூவாய்" ஞானத்தால் முற்றிப்பரிபக்குவமாகாத ஆழ்வார்தம்மோடுஆச்ரயித்துக் கூடியிருக்கும் குழாங்களாகவும், திருமிடோப நிஷத்து ரத்நாவளியில் வெகு பொருட்பாடுடன் நிரூபித்திருக்கிறார்.

அதே ரத்நாவளியில் "ஊடாடு பனிவாடாய்" என்பதால், ஆச்ரயித்தபேர்களுக்கு வெகு சீதஸ்பாவமான ஆசாரியார்களாகவும், 'மடநெஞ்சே' என்பதால் அந்தரங்கமான ஸம்பாஷணத்திற் குரித்தான ஆசாரியர்களாகவும் இறுதிப் பாசுரங்களுக்கும் நிர்வாஹம் கூறப்பட்டிருக்கிறது. மூலத்தில்-வாடை ஈர்கின்றது-கொல்லுகின்றது, என்றன்றோ இருக்கின்றது - இது சீதளமான மனதுடையவர்களை ஒக்குமோவென்றால், இங்கே விரகசமயத்தில் சீதளமான வாதமும் அநர்த்தமாகவே முடியும். பம்பாசரசிலிருந்து பூமணம் பொருந்தித் தண்ணீர்த் தரங்கத்தின்மீது உலாவிவரும் காற்றும் ஸ்ரீ ராமமூர்த்திக்கு ஸீதையின் விரஹ அவஸ்தையில் பாதகமாக ஏற்பட்டதென்று வால்மீகபகவான் கூறியுள்ளர்.

குறிப்பு:— இத்தசகத்தின் கருத்தைச் சுருக்கிச் சொல்லிய திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரம் பின்வருமாறு:—

அஞ்சிறைய புள்கள்தமை யாழியா னுக்குநீர்
என்செயலைச் சொல்லுமென விரந்து- விஞ்ச
நலங்கியது மாறனிங்கே நாயகனைத் தேடி
மலங்கியதும் பக்தி வளம்.

செயலை - நல்லவினைகளை இயற்றியிருந்தால் அவைகளின் புண்ணியவசமாய்ப் பகவானை அடையலாம். அதற்குப் பெற்றிலோம் நல்வினையின் பயனை அடையக்கூடாதவர் என்று கருத்து. பக்திவளம்-பக்தியின் முதிர்ச்சி.

ஆச்சரிய சூடாமணி

[373-வது பக்கத் தொடர்ச்சி.]

7. சூடாமணி அங்கம்

இடையுரை

ஓர் விஞ்சையன் தன் மனைவியுடன் வருதல்.

விஞ்சையன்:—ஸௌதாமினி! இதுவரையில் கல்விக்கடவுளைப் பூசித்துக்கொண்டிருந்த நாம் தேவேந்திரனைச் சென்று வணங்குங் காலத்தை மறந்தோம். ஆதலால் நீ களைத்திருந்தாயாயினும் என்னுடன் வா! குறித்தகாலத்திற்குள் விரைவிற் போகவேண்டும்

ஸௌதாமினி:—ஐய, வந்துவிட்டேன்.

விஞ்சை:—வில்லென வளைந்த இரு புருவத்தாய்! வாசனைவீசும் மலர்மாலை யணிந்த உன் கூந்தலை நன்கு இறுகப் பின்னிக் கட்டிக்கொள். குண்டல ஒளியால் வானவிற்போ லிலங்கும் உத்தராசங்கத்தை நன்றாகப் போர்த்துக்கொள்.

ஸௌ:—ஐய! அப்படியே செய்கிறேன் (இருவரும் வானத்திற் செல்பவர்போல் நடித்தல்)

விஞ்சை:—பார். மலைச்சிகரத்திலிருந்து மிகக் கரிய வானத்திற்கு விரைந்துதாவும் நமக்கு, பூமியானது இப்பொழுது மரக்கூட்ட முதலியவைகளைச் சிறிதுசிறிதாக விழுங்குவதுபோல் தோன்றுகின்றது, பார்.

ஸௌ:— ஐய! மலைக்குலங்களும் இப்பொழுது ஐயத்திற் கிடமாய் விட்டன. (சுற்றிச் செல்லுதல்)

விஞ்சையன்:—ஆ! நம் ககனயாத்திரை மேம்பட்ட இனிமையானதே. ஒருபால் காதலியின் தனதடங்கள் தீண்ட, மற்றொருபால் திசைமகடன் பயோதரம் படுகின்றன தண்ணீர்ச்சுமை நிறைந்த சூன்முதிர்மேகத்தைக் கைவளை வைரத்தாற் கீறிக்கொண்டு தேவலோகக்காற்று நன்குவீசும் நீனிற வானவழியில் இனிமையாகச் செல்கின்றேன். (திரைக்குள்)

இன்றுதொட்டு அக்கினிதேவன் அரக்கர் கெடுக்காத அவியை அருந்திடுக; சப்த இருடியரும் வானயாற்றில் நீராடிச் சிறந்த காயத்திரிமந்திரம் ஜபித்திடுக; அச்சமின்றி ஆதித்தன் குதிரைகள் மந்திரமலையை நேர்வழியாகக் கொண்டுசெல்க; கற்புடை மகளிர் தீமை தவிர்ந்திடுக; துறக்கநெறி முட்டின்றித் திறந்திடுக.

விஞ்சை:—ஆ! உலகத்திற்குப் பறைசாற்றுதல் போலத் தோன்றுகிறது; இராவணனைக் கொன்றிருக்க வேண்டும்.

ஸௌதாமி:—யானும் அப்படியே எண்ணுகிறேன். "அரக்கர் குலத்தை இராவணனுடன் முடித்தான் இராமன்" என்று ஒரு வதந்தி நேற்றுத் தோன்றியது.

பறையை முழக்கிக்கொண்டு ஜாம்பவன் வருதல்.

ஜாம்பவன்:-இப்பாரம் பெரிதே! (முன் கூறியதை மறுபடியும் சொல்லிக்கொண்டு) முன்பு நமுசி யென்னும் அசுரனைத் தள்ளிவிட்டு மேனோக்கிச் செல்லும் திருமாலின் திருவடிகட்கு முன்னே விரைவாகச் சென்றுகொண்டே கம்பீரமாகப் பெரும்பறை முழக்கினேன். அவ்வேலையை இராமன் இராவணனைக்கொன்று எனக்குப் பணித்தனன். உலகத்தார் திட்டமாகத் தக்க காரியத்தையே கையாளுவார்கள்; போவோம். (போய் விடுதல்)

விஞ்சை:— "இப்பொழுது மூவுலகக்கேடு வேருடன் முடிந்தது.

ஸௌதாமி:—கற்புடை மாதர் மனதிற்குச் சாந்த மேற்பட்டது.

விஞ்சை:—ஸௌதாமி, இப்பொழுது நம் விருப்பம் நிறைவேறியதால் விரிந்த செந்தாமரைக் கண்ணனைச் சென்று பூசிப்போம். (சென்றனர்)

இடையுரை முற்றிற்று.

போர்க்கோலங் களைந்த இராமன், இலக்குமணன், விபீடணன், சுக்கிரீவன் முதலியோர் வருதல்.

இராமன்:-(விபீடணனைப்பார்த்து)தோழ,விபீஷணா, நகரத்துட் புகுவாயாக; குடிகள் அரசனின்றி யிருப்பதைப் பார்; இனி வேண்டுங் காரியத்தைச் செய்; பெருந் துயரிற்பட்ட நகரத்தார் அவ்வரசன் மரபினரைக் கண்டாயினும் சமாதான மடைவார்.

விபீடணன்:—ஐய! அருள்புரிய வேண்டும்; யான் சுற்றத்தா ருறவால் ஒன்றும் கூறவில்லை. நல்லோரெங்கே! இரவிற்றிரியும் அரக்க ரெங்கே? தகாதாயினும் தங்களைப் பணிவதே எனக்கு இன்பமாதலால் எப்பொழுதும் அபாயமும் பிறருரிமையிற் செல்லுந் தன்மையும் அமைந்த தமையனுடைய அரசாட்சித்திருவை நான் விரும்பவில்லை.

இராமன்:—நற்குணனே, கூடாது, கூடாது! இவ்வாறு கூறுவது கோவியல் தருமமன்று. தானாகவே வந்த திருவைத் தள்ளலாகாது; நல்லோர் முன்னோனே! உன் தமையன் உன்னோடு துரத்திய தருமமானது இப்பொழுது உன்னை முன்னிட்டுச்சென்று அவனுடைய நாடெங்கும் காலூன்றிடுக!

விபீடணன்:—ஐய! இதுமுதல் நீவி ரன்புடன்மலர்க்கண்கொண் டருளியதால் புகழுக்குள்ளாகின்றேன்; சிவபிரான் எலும்பைப்பூணாகக்கொண்ட காரணம்பற்றித் தேவர்களும் அதனை விருப்புடன் தலையிற் றாங்கவில்லையா?

இராமன்:—நண்ப! சுக்கிரீவ! உன் நண்பன் விபீடணன் கலங்கியவனைப்போ லிருக்கிறான்; இவனை இலங்கையில் அமைச்சருடன் சேர்த்துவைப்பாயாக

சுக்கிரீவன்:-ஐயன் கட்டளை போலவே; இலங்கையரசே! இதோ இங்கு வருக; (இருவருஞ் சென்றனர்)

இராமன்:-இப்பொழுது யான் விபீடணனை அரசனாக்கிவைத்ததால் நற்பேறு பெற்றேன்; ஏனென்றால், விரும்பி வேண்டுவோரின் ஆசைக்கொடி பழுக்காதவனுடைய குடை சாமர முதலிய அடையாளங்களுடன் கூடின செல்வம் நடிகச்செல்வம் போன்றதே.

சுக்கிரீவன்:—ஐய! வெற்றி சிறக்க. (வருகின்றான்.)

இராமன்:—சுக்கிரீவ! சென்றதும் என் வந்துவிட்டாய்?

சுக்கிரீவன்:—'பிராட்டி நகர்விட்டு வெளிச்செல்லாவிட்டால் நான் நகரத்துட் புகமாட்டேன்' என்று விபீடணன் கூறினான்.

இராமன்:-(ஆதரவுடன்) அப்படியானால் நீயே! உன் தோழியைக் கூட்டிவா!

சுக்கிரீவன்:-ஐயன் கட்டளைப்படியே! (சென்றான்)

இராமன்:-(ஆலோசித்து) அனுமன் சொல்லை நம்பி வாலியைக்கொன்று மிகவருந்தி மலைகளைக் கொண்டு கடலி லணைகட்டி இலங்கையடைந்து இராவணனைத் துணைவருடனும் சுற்றத்தாருடனுங் கொன்றேன். நான் எதிர்பார்த்திருக்கும் அவ்வரசன் புதல்வி (சீதை) வெகுநாள் இராவணநகரில் தங்கியிருந்ததால் குற்றமற் றிருப்பாளா?

லக்ஷ்ம:—ஐய! அருள்புரிக! பெண்டிர் மனது இன்பத்தையே விரும்பும்; அரக்கரோ நல்லொழுக்கமற்றவர்; நாமோ வென்றால் வெகுதூரத்திலிருக்கிறோம்; ஆதலால் நாம் பிராட்டியின் மனத்தூய்மையைச் சோதிக்கவேண்டும்.

இராமன்:—லக்ஷ்மண, அனுமான் எங்கே?

லக்ஷ்ம:—அவன் இப்பொழுது போர்க்களத்தில் குரங்குகளின்மேல் பல மலைகளைத் தன் புயத்தால் கீழே தள்ளுகிறான்; அரக்கர் விழுங்கிய காடித்தலைவரை அவர் வாயினின்று பலமுடன் பிடுங்குகிறான். நீண்ட வாலுடைய பெருங் குரங்குகளுக்கு ஏற்பட்ட போர்க்களைப்பை அருவிநீராற் போக்குகிறான். தவிர இறந்த இராவணன் சுற்றத்தாரைக் கடல் முதலைகளுக்குப் பகிர்ந்துகொண்டு மிருக்கிறான்.

இராமன்:—அவனுக்குப்பொருந்திய செய்கையே. (திரைக்குள்) ஐயன்மீர் நில்லுங்கள்; விலகி நில்லுங்கள்; ஐயன்மீர் விலகி நில்லுங்கள்.

இராமன்:—லக்ஷ்மணா, இஃதென்ன?

லக்ஷ்ம:—இது பிராட்டியின் வருகை.

இராமன்:—ஜனங்கள் பிராட்டியைக் குறித்து என்ன சொல்வாரோ? லக்ஷ்மணா! ஜனங்களை விலக்க வேண்டா; மைதிலியை அவ்விடத்திலேயே ஊர்தி விட்டிறக்கி வெளிப்படையாக அழைத்துவாவென்று சுக்கிரீவனுக்குக் கட்டளையிடு.

லக்ஷ்ம:—ஐயன் கட்டளைபோலவே. (செல்லுதல்)

இராமன்:—இராவணனைப் பொருட்படுத்தாமல் என்னிடமே மனப்பற்றுடைய ஜானகியின் கற்பணி பூண்ட உருவை அனைவரும் பார்த்திடுக.

சீதை இலக்குமண சுக்கிரீவருடன் வருதல்.

இருவரும்:—(வணங்கி) பிராட்டி! இதோ: இப்படி!

(திரைக்குள்)

ஆஹா! லக்ஷ்மண சுக்கிரீவருடைய ஒழுக்கம் மிகவும் நன்று. வெகுதூரத்திலிருந்து தலைகுனிந்து வணங்கும் இவர்களது பார்வைகள் கோமகளின் தாள்களிலேயே பதிகின்றன.

சீதை:—(தனக்குள்) கோமகன் என்னை என்ன சொல்வாரோ! ஜனங்கள் என்னைக்குறித்து என்ன நினைப்பார்களோ? மாதரின் தன்மை நம்பக்கூடியதன்றன்றோ? பாக்கியமற்ற எளியேன் என்பொருட்டுக் கோமகன் துயர்க்கடலில் விழுந்து பிறகு தன் தோள் வலியால் நீந்திக் கரையடைந்தான். "முன்பு விற்

கொண்டு மணம் புரிந்தேன், இப்பொழுதும் விற்கொண்டே கைக்கொள்ளப் போகின்றேன்" என்று அனுமான் கூறியது உண்மையே. (எல்லோரும் அருகிற் செல்லுதல்)

லக்ஷ்ம:—ஐயன் வெற்றி பெறுக!

சுக்கிரீ:—ஐயன் வெற்றி பெறுக! வெற்றி சிறக்க!!

சீதை:—கோமகனே, வெற்றி சிறக்க!

இராமன்:—பெருமாட்டி! இதோ, இங்கே-(என்று சொன்னதும் முகம் திருப்பிக்கொள்ளுதல்)

இருவரும்:—இஃதென்ன!

இராமன்:—லக்ஷ்மணா! முதலில் அனுமனை அழைத்துவா!

லக்ஷ்ம:—ஐயன் கட்டளைப்படியே. (போனான்)

இராமன்:—சுக்ரீவ, முன் நீ இவளைப் பார்க்கவில்லையோ!

சுக்கிரீ! (பயந்து நிற்றல்)

இராமன்:—சுக்கிரீவ, நீ இதுகாறும் ஒரிடத்துங் கண்டிராத கணவனைப் பிரிந்த காலத்துள்ள கற்பைப் பார்! செஞ்சந்தனம் பூசிய தனங்களையும், மலர்களணிந்து நறுமணங் கமழும் கூந்தலையும், அருணனொளியைக் கவர்ந்து மேம்பட்ட ஆடையையும், கணவனைப் பிரிந்ததோர் கால ஒழுக்கத்திற்கு ஏற்குமாறு இப்பதிவிருதை பெற்றிருக்கின்றாள் பார்.

சுக்கிரீவன்:—ஐய! என் நல்லொழுக்கமெனுங் குற்றத்தால் இவள் தங்கள் சமூகத்திற்கு வந்தாள்.

இராமன்:—ஆம்! இலக்குமணனும் பார்த்தேயிருக்கமாட்டான்.

சீதை:—(தனக்குள்) ஐயோ! கஷ்டம்! அநசூயை அளித்த வரமும் இப்பொழுது எனக்குத் தீங்காக நேர்ந்ததே.

இலக்குமணனும் அனுமனும் வருதல்.

லக்ஷ்ம:—ஐயனே அருள்புரிக!

அனு:—அரசன் வெற்றி பெறுக?

இராமன்:—லக்ஷ்மணா! நீயும் அனுமனும் இவளைப் பாருங்கள்.

இருவரும் சீதையைப்பார்த்து முகந்திருப்பிக் கொள்ளுதல்.

அனுமான்:—அரசே! நான் இலங்கையில் இவளை வேறுமாதிரியாகப் பார்த்தேன்; இப்பொழுது இவள் வேறுமாதிரியாக விருக்கிறாள்.

சீதை:—கோமகனே, நான் சிறிது சொல்ல விரும்புகிறேன்.

இராமன்:—உன் அழகே கூறுகின்றதே.

சீதை:—சிறுவ, நீ என் சொல்லைக் கேள்.

லக்ஷ்ம:— உன் சொல்லைக் கேட்டதன் பயனே இஃதெல்லாம்.

சீதை:—வாயுகுமர, நீ கேள்!

அனு:—அக்காலங் கடந்துவிட்டது.

இராமன்:—இன்னும் நீ என்முன் நிற்கின்றாயா? கற்பற்றவளே! நீ தண்டகவனத்தில் தினந்தோறும் நிசிசரராகிய சோர நாயகருடன் கூடக் குறியிடமமைத்துக்கொண்டு சூதுவாதறியாத எம்மை ஏமாற்றிவிட்டாயே!

சீதை.—(முறுவலுடன்) கோமகனும் கொடுஞ்சொற் கூறுகின்றனரே!

சுக்கிரீ:—(தனக்குள்) கணவன் இவ்வாறு கூறுவதைக் கேட்டுப் புன்னகை புரிகின்றதால் எல்லாப் பெண்களினும் குறைந்தவளாயினுஞ் சிறந்தவளாயினும் இவளை அண்ணலின் முன்னின்று அகற்றவேண்டும். ஈமத்தீயானது பாலாகுதியைப் பெறத் தகுமோ?

லக்ஷ்ம.—இவள் இவ்வுடலுடன் செல்லத்தக்கவளல்லள்.

அனு:—ஐய! இவளுக்குத் தக்க தண்டனை விதித்திடுக.

சீதை:—கோமகன் கட்டளையால் தீப்புக விரும்புகின்றேன்.

இராமன்:— லக்ஷ்மணா! இக் கற்புடையவளது விருப்பத்தின்படி செய்.

லக்ஷ்ம:—ஐயன் கட்டளைப்படியே. (தனக்குள்) இப்பொழுது களிப்புற்றேன். (வெளிப்படை) தேவி, இதோ, இங்கே.

சீதை:—(தன்னுள்) மனமே! கோமகன்தன் கழலிணை விழுந்து வணங்குவாம்.

(இருவ்ரும் போதல்.)

189104

இலஞ்சிப் பாவை.

[368-வது பக்கத் தொடர்ச்சி]

14. வாட் போர்.

பரிதிவடி வாள்பிடித்துப் பல்லினு லிதழதுக்கித்
திருகுசினந் தலைக்கொளீஇச் செங்கண்க டையுமிழக்
குருதிபா யடுகளத்திற் குற்றுயிரிற் கிடந்தார்க்கண்
டருகணையக் கொடுங்கூற்று மஞ்சிநின் றலறுமால்.

நைடதம்.

மறுநாட் பொழுதுபுலர்ந்து இரவிதன் னிளங்கதிர்கள் வானிலெழு முன்னர், இருவரும் தத்தம் சேக்கை துறந்தெழுந்து, நிறமாறும் அடிவானத்தைச் சற்றே யுற்றுநோக்கி, காலைக்கடன் முடித்துக் கடவுளைத் தொழுது, கிடைத்த உணவைக் கடிதினுண்டு வழிக்கொண்டனர். மலைநாட்டானும் பன்னிற மேற்போர்வை போர்த்து முன் சொன்ன வண்ணம் வழிகாட்டி நடந்தான். பாதையும் பல வகைப்பட்ட இயற்கைத் தோற்றங்களினிடையே இயைந்து சென்றது. கவிந்த மலைகளி னோரங்களி லது செல்லக் கீழிருந்த பச்சைநிறப் புற்றரைகளும், செழித்துச் செறிந்த பழுமரங்களும், அவைகளி

னிடையே வளைந்துசெல்லும் காறுறைகளும் கட் புலனாயின. அடர்ந்த அடவியின்கண் அது ஊடுருவிச் செல்லுங்கால் முன்னின்ற தின்னதென அறிவதும் அரிதா யிருந்தது. ஒருகால் உயர்ந்த மலையை யது உழுது சென்றதால், அருகிருந்த மரங்களின் உதவியை நாடி யவர் அதன் கிளைகளைக் கைப்பற்றின போது உதிர்ந்த பனித்துளிகள் நித்தில மொத்தன.

நாண்மலரின் நன்மண முகர்ந்தும்,பரிதியின்கொடுமையில்லாப் பக்குவந் தெரிந்து களித்தும், மந்தமந்த வீசிய காற்றினின்பத்தை நுகர்ந்தும், அவர்கள் சென்றது, முந்துறு தீவினையை யறியாது மறிக்குலம் மதர்த்த தொத்தது. வண்ணக்கரைச் சூழலுடைய ஆங்கே மலைகள் அடுக்கடுக்காய் உயர்ந்திருந்தன. அவைகளைச் சுற்றிச் சென்ற அப் பாதையிலே நூற்றுவர் நிற்பின், ஆயிரம்பேர் அளவிலாற்றலர் அடர்த்துவரினும் அவரை யொருங்கே அடித்து முறிக்கக் கூடியதாய் அவ்விடம் அமைந்து இருந்தது. விலங்கலின்மேற் றோன்றின சிறு செடியும் புதரும்; ஏரியின் பாங்கார் தென்பட்டன நாணலும் நறுமண மலரும். சிற்சில விடங்களில் ஒலிமிகு மலையின்வீழருவிகள் காறுறுகளெனப் பெருகிக் கல்லையும் மணலையும் குவித்தன. வழியும் கடப்பதற்குச் சற்றே கடினமானவுடன், வழிகாட்டி மெல்லென நடந்து, மனிதஇயக்கமற்ற அந்நாட்டை விஜயன் தேடிவாக் காரணமென்னென வினவத்தொடங்கி இராதாகிருஷ்ணனிடமிருந்து அனுமதிச்சீட்டைப் பெறுமல் அவ்விடத்தை நாடிவா எவரும் அஞ்சும்போது, அவனங் கடைந்த தெவ்வா றென்றான்.

வி:—என் உத்தரவுச்சீட்டு இதோ என் னிடையில் தொங்குகின்றது. ஆயினும், அவ்வாளைக் கையாள நேரிடுமென்று நான் எண்ணவேயில்லை. நான் சிறிது நாட்களுக்குமுன் இவ்விடம் வந்தபோது, அதோ அக்குன்றிற் சார்ந்து தோன்றும் பனிபோல் எல்லாம் அமைதியாகவே இருந்தன. உனது தலைவனும் அக்காலத் திங்கில்லை; அவன் போரிலிருந்து விரைவில் திரும்புவதாய்ப் பேச்சுமில்லை. ஒருகால், வழிகாட்டி வந்தவன் என்னிடம் பொய்புகன் றிருக்கலாம்.

வழிகா:—அவ்வாறுயின் மீண்டும் ஏன் வந்தாய்.

விஜ:—நீ ஒரு வீரனுயிருந்தும் அக்கேள்வி கேட்கிறுயே! நமது இயக்கம் இயந்திரம்போன்று சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டதோ?சோப்பல்யொழிக்க நாம் வெளிக்கிளம்புங் காலத்து நம்மை நெடுந்தூரம் கொண்டுசெலுத்த ஏதேனும் நொய்தினுெய்ய காரணம் போதாதோ?ஒரு புறுப் பறத்தல், ஒரு நாய் நம்மைவிட் டகன்றுபோதல், கண்முன் படுமோர் எழிலுடை இயற்கைத் தோற்றம், ஆடவ ராவியைக் கொள்ளைகொள்ளும் நங்கையர்தம் நச்சுப்பார்வை— இவை போதாவோ நம்மை நெடுந்தூரம் உய்த்திடற்கே.

வழி:—உன்னுடைய மறைவெண்ணங்களை அறிய நான் ஆவல் கொள்ளவில்லை. அவற்றை நீயே வைத்துக்கொள். தேளிற்கு விடம் கொடுக்கிலென்பது போல் என் கேள்விக்கு விடையும் கடையில் புகன்றுய் போலும். அதுநிற்க, நீ இரண்டாம் முறை புறப்படுவதன்முன், மாறன் மலைநாட்டார்மீது படையெடுத்து நின்றது கேட்டிலையோ?

வி:—இல்லை, இல்லை. அரசர் விழாவைக் காத்து நிற்க அவரது மெய்க்காப்பாளர் திரண்டதுண்மை. ஆயினும் மலைநாட்டார் செய்யும் போர்முயற்சிகளைக் கேட்டவுடன் அவர்களும் போர்க்கோலம் பூண்டு திரள்படக் கூடுவா ரென்பதற் கையமில்லை. எமது அரசர் துவசமும் விண்ணிற் படர்ந்து விளங்கும்

வ:—விளங்கட்டும். விலோதனத்தின் பட்டுத் துகிலைப் புழுக்களே விழுங்கிவிடுதல் ஏற்றதன்று. அதற்கேற்ப எங்கள் பனைக்கொடியும் விண்ணலைத்து நிற்கும். அஃதிருக்கட்டும். நீ நல்லெண்ணத்தோடு இவ்விடம் வந்தவன்,வழிதப்பிப் பொறிகலங்கி யலைபவனுகியும் எமது தலைவரைப்பற்றிப் பேசும்போதெல்லாம், முள்ளம்பன்றிபோல் உடல் சிலிர்த்து, வெளிப்படையாய்ப் பகைகாட்டிப் பேசுகின்றுயோ ! அஃதேன்.?

வி:—வீர ! நேற்றுவரை யான் உமது வீரரைப் பற்றி அதிகம் அறிந்திலேன். அவர் ஒருகால், அரச சபையில் மந்திரக்கிழவர் ஒருவரை மடித்து விட்டுத் தன் சுற்றத்தாருடன் சேர்ந்து நாட்டைத் துறந்து காட்டில் புக்குப் பிறருக்கு இடர் விளைப்பவர் என்றுமட்டும் தெரிந்துகொண்டிருந்தேன். ஆயினும், அது ஒன்றே அவரைத் தாழ்மையாய் எண்ணப் போதுமானது.

வ:—அவர் வாளுருவியது எதற்கென் றறிவீரோ? இழிமொழிகள் பலபேசி அவரை யடித்தலி னன்றோ அவர் அவ்வாறு செய்தது? அச்சமயம் அவர் வெளிநிலத்தில் இருந்தாலென்ன அரசன தாண்மனையில்தானிருந்தாலென்ன? எவ்விடத்தில் அவருக்குப் பரிபவமுண்டாகியதோ அவ்விடமே, அப்போதே, பழிவாங்குவது அவரது வீரத்தன்மையி னியல்பு. அரசரது உறைவிடமா யிருந்தாலும் கடவுளின் கோயிலாகவே இருந்தாலும், தயங்குவதற்குக் காலம் அதுவாகுமோ ?

விஜ:—எவ்வாறுயினும் அதுகுற்றத்தின்பாற்படும். எனினும் அவரை நோவானேன். அரசர் அச்சமயம் சிறுபிள்ளையா யிருந்தார். அவருக்காக அரசை நடத்தியவர் வன்மையற்றவர். அது போகட்டும். கொள்ளையே தொழிலாயுடைய உனது தலைவரது வாழ்க்கையை என்னென்பது? ஒரு காரணமு மின்றிப் போரிட்டும், போர்முறை யறியாப் பேதையரை வென்று அவர் மெய்ப்பாடுபட்டு வியர்வைநீர் நிலத்தில்வீழ விளைவித்த பைங்கூழ்களைப் பிடுங்கி அவரை வருத்தியும், அரைவயிறும் நிரம்பாமல் அவர் செய்த முயற்சிகளை அவலமாக்கியும், அவரது தொழிலுக்கு இன்றியமையாத அவர் ஆடுமாடுகளைக் கவர்ந்து அவர்களை வறியராக்கியும் திரிவது மேன்மை தருவதோ? உன்னைப்போன்ற உண்மைவீரர் இத்தொழில்களை வெறுக்க வேண்டாவோ ?

வ:—(புன்னகையுடன்) அம் மலையின்மே னின்று கிழக்கிலும் தெற்கிலும் உன் கண்ணைச் செலுத்திக் கீழ்த்தோன்றிய பசுமைநிறப் புலங்கள் அடுக்கடுக்காகப் படர்ந்திருப்பதையும் இடையே பொழில்கள் பொதிந்திருப்பதையும் கண்டு நீ களித்ததை நான் உற்று நோக்கினேன். இந்நிலங்களும் சோலைகளும் ஒருகாலத்தில் மலைநாட்டாருக்கு உரியவை; அந்நியர் புக்கு அவைகளை எம்மிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர். இப்போது எமது இருப்பிட மெது? எம்மைச் சுற்றியிருப்பவை பாறையுங் கல்லும்.

ஆநிரைகளையும் உணவுகளையும் எமக்கு நல்கீரோ என்று நாங்கள் இவைகளைக் கேட்பின், அவை, ‘உமக்கும் உமது மூதாதையருக்கும் உரியவை கத்தியும் கேடயமும்; நாங்கள் உங்களுக்கு இருக்க இடந் தந்தோம். மற்றவைகளை உமது படைக்கலங்கொண்டு பெற்றுக் கொள்ளுங்கள்’ என்று எமக்குப் பதிலளிக்கும். இந்த மலையரண்களில் நெருக்கிச் செலுத்தப்பட்டு, அடைந்துகிடக்கும் யாங்கள், எங்களை வருத்தியவரை வருத்தியும், எங்களிடம் கொள்ளையிட்டவரைக் கொள்ளையிட்டும் காலங்கழித்தலில் ஏது பிழையுளது? அந்நிலங்களில் தென்னுட்டான் ஓரே கதிரை விளைத்திடினும், பல்லாயிரம் ஆநிரைகளில் ஒன்றே ஒன்று அவ்வாற்றின் கரைப்புறத்தில் திரியினும் யாங்கள் எங்களுக்குரிய பங்கைச் சங்கையின்றிக் கொள்வோம். தென்னுட்டாரிடம் வருத்திப்பிடுங்குவது பிழையென்று எந்த மலைநாட்டான் இயம்புவான்? நீ எமது தலைவனைக் குறைகூற வேறே காரணங்களைத் தேடுக.

வி:—வேறு காரணங்க ளில்லையென்பது உன் எண்ணமா? என்னை வழிமறுத்துக் கொலைசெய்ய எண்ணிச் செய்த சூழ்ச்சிகளுக்கு என்ன சொல்லுகிறுய் ?

வ:—முன்னேக்கமின்றிப் பரபரப்புடன் செய்யுங் காரியத்தின் பயன் அது நீ இழந்த நாயைத் தேடிவருவதாகவாவது, புறுவைத் தொடர்ந்து வருவதாகவாவது, அன்றி மலைநாட்டு மங்கையை மதிப்புடன் நாடி வருவதாகவாவது முன்னறிவித்திருந்தால் உனக்கு ஒன்றும் நேரிட்டிராது. மறைந்து வருபவன் நட்புத் துறந்தவ னன்றோ? காந்த கருதலனுயினும் இச்சமயம் ஆரூடத்தின் முன்னறிக்கை யின்றேல் உனக்கொன்றும் நேர்ந்திராது.

வி:—அது போகட்டும்.இப்போது காரணங்களைக் காட்டி உன்னைச் சினமூட்ட நான் மனங்கொள்ளவில்லை. இந்த இறுமாந்த இராதாகிருஷ்ணனோடு இகல்புரிவதாய் வாக்களித்திருக்கிறேன். இருமுறை யான் இவ்விடத்தை நல்லெண்ணத்தோடு சார்ந்து வந்தேன். இனி மூன்றுவதுமுறை யான் வருங்கால் முரசமார்ப்ப வின்னு ணெறிப்ப, கதலி தழைப்பப் படைக்கலந்தாங்கிப்பகைவரைத்தேடுங்கோலத்தோடு வருவேன்.தலைப்படும் இடங்குறிக்கப்பெற்ற காதலன் காதலியைக்காண விழைதலினும் வேட்கைமிக்கு இந்நன்றியில்மகனைக் காண விழைகின்றேன்.

வ:—அங்ஙனமாயின் உன்னவா நிறைவேறட்டும்'' என்று கூறித் தன் னூதுகுழலை எடுத்து முழக்கினன்.முழக்கவேசேவலொன்றுகூவச்சேணிடையுறையும் பிற சேவல்களவ்வொலியைக்கேட்டுத் தாங்களும் தனித்தனிச்சிலம்பல்போல்ஒவ்வோர் ஓங்கலினின்றும் அதைப்போன்றுவெவ்வேறு ஒலிகிளம்பிற்று. சரேலெனச்சோலையினின்றும்,புதரினின்றும், கவசந்தரித்துக் கையில் வில்லும் வேலுந் தாங்கிய வீரர் பலர் வெளிக்கிளம்பினர். வலமும் இடமும், மேலும் கீழும், நாற்புறமும் உயர்ந்த உருவத்தினர் சூழவே, புல்லும் புதரும் வீரரை ஈன்ற தொத்தது; குன்றுந் தன்வயிறு கீண்டு கணக்கில் மறவரைப் பயந்தது போன்றது. வார்த்தையொன்றும் வழங்காதவராய், முன்னடிவைத் துடல்வளைத்து ஈட்டியை யெதிரில் நீட்டி, தலைவனது ஆணையை எதிர்பார்த்து நின்றது, பிறங்கலி னடுக்கத்துத் தகர்ந்த பாறைகள் தங்கி, சிறு குழந்தையும் அசைக்க அதிர்ந்து கணவாயில் விழுந்தருவாயி லிருப்பது போன்றது. வழிகாட்டி அவர்களை ஒருகணம் இறுமாப்புடன் நோக்கிப் பின் விஜயனைப்பார்த்து ‘இவர்கள்தா னிம் மலைநாட்டு வீரர்; நீ காணக் கருதிய இராதாகிருஷ்ணனும் யானே’ என்றான்.

அஞ்சா நெஞ்சுபடைத்த விஜயவன் நூற்றுக் கணக்கான வீரர்கள் நொடியில் தன் கண்முன் நிற்கக்கண்டு சற்றே கலங்கினனேனும், உடனேதேறி, இறுமாந்த இராதாகிருஷ்ணன்பார்வைக்கேற்ற நோக்கமே யவன்மேற் செலுத்த, பின்புறம் தன்னைப் பகைவர் எதிர்க்காவண்ணம் பாறையொன்றின்மேல் தன் முதுகைச் சேர்த்து, ஒரு காலை முன்வைத்து, வாளை உருவி, “தனித்தனி வாருங்கள், இன்றேல் ஒன்று சேர்ந்தே வாருங்கள். இந்தப்பாறை இடம்பெயர்ந்தோடும்போது நானும் உம்மைக் கண்டு ஓடுவேன்' என்றான். இவனது தறுகணுண்மையைக்கண்ட இராதாகிருஷ்ணனுக்கு ஒருபுறம் இறும்பூதும், மறுபுறம் விஜயன்மேல் நன்மதிப்பும் உண்டாயின. தன் னூற்றலிற்கேற்ற பகைவன் கிடைத்தானென அவனுள்ளங் களிகூர்ந்தது. ஒருகணம் அவ்வாறே நின்று பின் தன் கையை வீசலும், நின்ற படைவீரர் யாவரும் அவரவர் நின்றிவிடத்திலேயே மறைந்துவிட்டனர். சூலமும் கணிச்சியும் சுற்றிநின்ற செடிகளினிடையே மறைந்தன; நிலமாதே மீண்டுமவர்களை யுள்ளிழுத்துக்கொண்டதுபோ லிருந்தது. சற்றுமுன் கொடிகளையுங் குஞ்சங்களையும் அலைத்தாட்டிய வளியும் வெறுங் குன்றின்மேல் வீசிக் களைத்தது; சற்றுமுன் சூலத்தையுங் கேடயத்தையுந் தாக்கி மிளிர்ந்த பகலவன் கிரணங்கள் பயனற்றுப் பாறையிற்பட்டு மழுங்கின.

வியப்புடன் இதனைப் பார்த்துநின்ற விஜயன் தான் கண்டது கனவோ அன்றி உருவெளித்தோற்றமோ என ஐயுற்று, எதிர்நின்ற இராதாகிருஷ்ணனைத் தன் கண்ணைத் தேய்த்து நோக்கலும் அவனும் “பயப்படாதே ! ஓ! அவ்வாறு உனக்குச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. ஆயினும் எனது படைவீரரைக் கண்டு அயிர்ப் புறுதே. நீ எனது விருந்தினன், யான் உன்னைக் கோயிலாங்கூர் கொண்டு சேர்ப்பே னெனக்கூறிய மொழியினின்றும் வழுவேன். ஒருவனைக் கொல்வதற்குப் பலபேரைக் கூவியழைக்கும் பதடியல்லேன் யான். இராதாகிருஷ்ணனிடமிருந்து உத்தரவுச்சீட்டுப் பெறுமல் உன் பணைத்தோளே பெருந் துணையாக் கொண்டு இவ்வழிகளைக் கடப்பேன் என்று நீ கூறியது பிழையென வுனக்கு நிரூபிக்கவே என் வீரரை அழைத்தேன்'' என மொழிந்தனன்.

நித்திலம் - முத்து. மறி - மான்குட்டி. விலங்கல் - மலை. விலோதனம் - துகிற்கொடி. பைங்கூழ் - பயிர். புலம் - வயல். வின்னுண் - வில்லினது நாண் - சிலம்பல் - ஒலித்தல். ஓங்கல் - மலை. பிறங்கலின் அடுக்கம்-மலையினது சரிவு. தறுகாணுண்மை - அஞ்சாத வீரம். இறும்பூது - ஆச்சரியம். கணிச்சி - கோடரிப்படை. வளி-காற்று.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[354-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour).

கட்டியமைத்தல்—படைப்புள்ளம்:— பூச்சுக்கள் வளையில் கூடு கட்டுகின்றன. பறவைகள் மிக அழகிய கூண்டுகள் கட்டுகின்றன. தேனீயின் தேனடையைக் கண்டு வியக்காதவர் யார். எலி வளைமுதலியவைகளைத் தோண்டுகின்றன. சிலந்திக்கூடும் பட்டுக்கூடும் நெய்தற்றொழில் வல்லவரது நெஞ்சத்தை அள்ளுகின்றன. மக்கள் வீடு கட்டுகின்றனர். இவை எல்லாம் கட்டியமைக்கும் இயற்கைச்செயனிலை சிறந்து விளங்குவதில்லை. ஆனால் மக்களிடைமட்டும் அறிவோடு ஒன்றுபட்டு உயர்நிலை யடைந்து விளங்குகின்றது. குழந்தைகளிடை இச்செயனிலையின் இயக்கத்தைக் காண்கின்றோம். கண்டதை எல்லாம் திருத்தி யமைக்கப் புகுகின்றன. குழந்தைகள் பொருள்களை உடைத்தெறிந்து வேறுவகையில் திருத்தியமைப்பது இவ்வியற்கைச்செயனிலையா லன்றோ? நம்முடைய கையேனும் சும்மா இருக்கின்றதா? இதற்கேற்ற மெய்ப்பாட்டைப் படைப்புள்ளம் என வழங்குவோம்.

தும்பல், இருமல், சொரிதல், வெளிக்குப்போதல் என்பனவும் இயற்கைச் செயல்களேயாம். இவை யாதேனும் குறிப்பிட்ட ஒருறுப்பைப்பற்றி எழுகின்றன. ஆதலால் உடல்முழுதையும்பற்றி எழும் மற்றைய இயற்கைச்செயனிலை போன்றன அல்ல எனலாம். இவற்றை மடக்கென வேறு பிரிக்காமல் இயற்கைச் செயனிலையென ஏன் கூறுதல்வேண்டும்? இவைஎழும்போது ஓர் உள்துடிப்பு எழுகின்றது. பேரவாவாக முற்றுகின்றது. எவ்வாறேனும் அச் செயல்களைச் செய்துமுடிக்கவேண்டும் என முந்துகிறோம். அந்நிலையில் மற்றைய இயற்கைச்செயல்கள் மறைந்துவிடுகின்றன. இச் செயல்கள் தடைபட்டபோது வருத்தப்படுகின்றோம்; அவற்றைச் செய்துமுடித்தால் ஆறுதல் அடைகின்றோம். மற்றைய இயற்கைச் செயல்களைப்போல இவற்றையும் அடக்கி ஆளலாம். இவை யனைத்தும் இயற்கைச்செயனிலையின் இயல்புகளேயன்றி மடக்குச்செயல்களின் இயல்புகள் அல்ல. வேர்த்தல் முகம்வெளுத்தல் முதலியன மடக்குச் செயலாகவும் எழுகின்றன; அச்சம் முதலிய இயற்கைச்செயனிலைகளிலும் எழுகின்றன. ஆனால் அவற்றைத் தனியே தூண்டுவதற்கு ஏதேனும் உட்துடிப்புண்டா? "தும்மல் வேண்டும்" "வெளிக்குப் போதல் வேண்டும்" என உள்துடிப்பு எழுவதுபோல "வேர்க்க வேண்டும்" என உட்டுடிப்பு எழுவதில்லையன்றோ? வேர்த்தல் முதலியன வெளிக்குப்போதல் முதலியனபோல நோக்கமுடையன அல்ல. அவ்வாறு வேர்த்தல் முதலியவற்றோடு தும்மல் முதலியவற்றை ஒன்றுவைத்து ஆராயும்போதுதான் பின்னினத்தைச் சேர்ந்தவை இயற்கைச்செயனிலையைக் குறிக்கின்றன என்பது நன்கு விளங்குகின்றது.

அழுகை—அவலம்:—பிறந்ததும் குழந்தை அழக் காண்கிறோமாதலினால் அழுகை இயற்கைச்செயல் எனக் கூறுதற்குத் தடைஇல்லை. பசியினாலோ, உடல் வருத்தத்தாலோ, நோயாலோ, குளிராலோ, சினத்தாலோ வாடும்போது குழவி அழக் காண்கிறோம். இவ்வழுகை உதவியற்ற நிலையைக் குறிக்கின்றது. தன்னாலொன்றும்செய்ய இயலாதபோது இவ்வழுகை எழுகின்றது. பிறருதவியை நாடுதலே இதன் பயன். பறவைகளிடத்தும் ஆடு முதலிய விலங்குகளிடத்தும் இவ்வவலக் குரலைக்கேட்டு நாம் வயிறு குழம்பியதில்லையா? இவ்வழுகையே தாய்மையை எழுப்புகின்றது. இதற்கேற்ற மெய்ப்பாடே அவலமாகும். இதன் பலவேறுபட்ட நிலைகளை அவலக் கவலை, கையாறு கலக்கம் எனத் தமிழறிஞர் முறை செய்வர். முதல்நிலையாகிய அவலமே குழந்தைகளிடத்தும் விலங்குகளிடத்தும் காணப்படுதலின், அதனையும் அதனோடு எழும் அழுகையுமே இங்குக் குறிக்கின்றோம். இங்கு அழுகை என்பது கண்ணீர்வரல் ஒன்றைமட்டும் குறிக்கவில்லை. அவலம் எழும்போது தோன்றும் செயலனைத்தையும் குறிக்கின்றது. இவ்வவலம் நம் செய்கையனைத்தையும் தடைசெய்துவிடுகிறது. கை கால்கள் விழுந்துவிட்டாற்போலாகிவிடுகின்றன. அச்சம் எழுந்தபோது செயலற்றநிலை எழுவதுபோல அவ்வளவு கடுமையாக இந்நிலை எழுவதில்லை. எளிதாகச் செய்யக்கூடிய அளவோடு இந்நிலையின் கொடுமை நின்றுவிடுகின்றது. உடல் முழுதும் அலுத்துப் போகின்றது. செய்யும் செயலும் சில; அவையும் விருப்பமின்றி வருத்தத்தோடு செய்யப்படுகின்றன. மெல்லமெல்லத் தள்ளாடிக் கையை விழுதெனத் தொங்கவிட்டுக் காலை இழுத்து இழுத்து நடக்கின்றோம். இவைகளே அவலத்தின் அடையாளமாகின்றன. நம் குரலும் உரங்குன்றிப் போகின்றது. அவலம் தொண்டையை அடைத்து அடைத்து வருகின்றது என்று பேசுதல் காண்க. குரலின் இனிமை குன்றுகிறது. குரல் உடைந்தாற்போலப் பேசுகின்றோம். மூச்சுவிடும் தசைநார்களும், குரல்வளையின் தசைநார்களும் அசைவற்று நிற்கின்றன. தலையைத் தொங்கவிட்டுப் பேச்சின்றி வாளா குந்திக்கிடக்க விரும்புகின்றோம். உடல்முழுதும் பாவிக்கிடக்கும் தசைநார்களின் சுறுசுறுப்புக் குறைகின்றது. கழுத்து வளைகிறது, தலை வணங்குகிறது. வாய்ப்பூட்டும் தளர்கிறது. தாடையின் தசைநாரும் மோவாய்க்கட்டையின் தசைநாரும் தளர்ச்சியுறுவதால், முகம் நீளத்தில் நீண்டும் அகலத்தில் குறுகியும் போகின்றது. கண்களோ பெரிதாகத் தோன்றுகின்றன. ஆனால் மேலிரப்பை தளர்ந்து கீழ்விழுவதால் கண்கள் மறைபடுகின்றன. ஏதோ பெருஞ்சுமையைச் சுமப்பதுபோல நமக்குத் தோன்றுகிறது. நேரே நிமிர்ந்து நிற்கமுடியவில்லை. கைக்கெட்டிய பொருளைப் பிடித்துக்கொண்டு அதன்மேல் சாய்கின்றோம். நிலையற்ற பணைபோல விழுகின்றோம். இயக்கத் தசைநார்கள் இவ்வாறு தளர்ச்சி

யுற்றபோது தாமேஇயங்கும் தசைநார்களோ முறுக்கேறிச் சுருங்குகின்றன. அதனால் குருதிஓட்டம் தடைபடுகின்றது. உடலும் முகமும் குறுகி வெளுக்கின்றன. குளிரும் நடுக்கமும் உண்டாகின்றன. கைகால்கள் ஈர்ந்துபோகின்றன. உள்ளுறுப்புக்களும் குருதியின்றித் தயங்குகின்றன. வாய் உலர்ந்துபோகின்றது; கைப்புச்சுவை தோன்றுகிறது. பாலூட்டும் தாய்க்குப் பால் வறண்டுபோகின்றது. ஆனால் கண்ணிலிருந்துமட்டும் கண்ணீர் வடிகின்றது. மூக்கினின்றும் நீர் வடிகின்றது. அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் முகம் சிவந்துபோகின்றது. நுரையீரலில் உள்ள குருதிக்குழைகள் சுருங்குவதால் மூச்சுவிட முடியாமல் திணறித் தயங்குகின்றோம். மார்பைப்பிடித்து அழுத்துவதுபோலத்தோன்றுகின்றது. பெருமூச்சுவிட்டு இதனின்றும் தப்புகின்றோம். மூளையிலும் குருதிஓட்டம் குறைவதால் எண்ணமிடுவதும் மறைகின்றது. தூக்கம் வருகிறது. (Lange) இவ்வாறு ஒரு பெரியார் அவலத்தின் ஓவியம் எழுதிக் காட்டுகின்றார்.

தன்னெடுப்பு—பெருமிதம் :—அகப்பற்று என்று பேசப் புகுவதனை யார் அறியார்? நான் என்ற முனைப்பு எண்ணத்தால் தம்மை உயர்வாகக்கருதி இறுமாந்து நிற்பாரும், தம்மை இழிவாகக்கருதி உடல்குன்றி நிற்பாரும் உலகில் எங்கும் உளர். உடன்பாட்டு அகப்பற்று என்றும் எதிர்மறை அகப்பற்று என்றும் ரிபோ (Ribot) என்பவர் இவ்விருநிலைக்கும் (Positive Self feeling, negative self feeling) பெயரிடுகின்றார். உடன்பாட்டு அகப்பற்றினைப் பெருமிதம் என்றும், எதிர்மறை அகப்பற்றினை இளிவரல் என்றும் பண்டைத் தமிழர்கள் வழங்கியுள்ளனர். பெருமிதத்திற்கு ஏற்ற இயற்கைச்செயனிலையைத் தன்னெடுப்பென்றும், இளிவரலுக்கேற்ற இயற்கைச்செயனிலையை தன்னொடுக்கம் என்றும் வழங்குவோம்.

தன்னெடுப்பு என்பதனை இறுமாப்பு என்றும் கூறலாம். அந்நிலையில் தசைநார்கள் அனைத்து முறுக்கேறி நிற்கின்றன. இறுமாத்தல் என்றாலே நிமிர்ந்து நிற்றல் என்றன்றோபொருள்? இதனை விலங்குகளிடையும்கூடக் காண்கிறோம். அவற்றினிடையே காதல் எழும் காலத்தில்தான் இவ் வியற்கைச்செயனிலை பொதுவாகக் காணப்படுகின்றது. மயிலானது தன் தோகையை விரித்தாடுவதனையும், ஆடற்புறா தன்மார்பை வளைத்து ஆடுவதனையும் காண்க. பாலிகளிடையே குதிரையைக் காண்க. நேரே நிமிர்ந்து, கழுத்தை வளைத்து, வாலைத்தூக்கி, குளம்பைக் காற்றில் தூக்கிவிட்டு, விரைந்தோடுவதைக் கண்டு நாம் களித்ததில்லையா? காளையின் நடையும் அத்தகையதே. "ஏறுபோற் பீடு நடை" என்றார் அன்றோ திருவள்ளுவனார். பிறர் கண்டு மெச்சவே இச்செயல் எழுகின்றது. தன்னுணர்ச்சி (Self Consciousness) இன்றியே விலங்குகளிடை எழுதலினால் இதனைச் செருக்கு எனக் கூறுவதற்கில்லை. ஆதலின் பெருமிதம் என்பதனைச் செருக்கு என்ற பொருளிலன்றி "இறுமாப்பு, செம்மாப்பு" என்ற பொருளில் இங்கு வழங்குகின்றோம்.

குழந்தைகளிடம் இவ் வியற்கைச்செயனிலையைக் காணலாம். பேசுவதற்கும் நடப்பதற்கும் முன்னரேயே இச்செயனிலை அவர்களிடம் மலர்கின்றது. கையை அசைத்தல் நகைத்தல் நகர்தல் முதலியவற்றைக்கண்டு சுற்றியுள்ளார் மெச்சும்போது குழவியும் களித்து மறுமுறையும் மறுமுறையும் செய்ததையே செய்துபோகின்றதன்றோ? பேசப் பழகியபோது நம்மை பற்றியிழுத்து "இதோ நான்செய்கின்றதைப் பார். நான் எவ்வளவு நன்றாக ஓடுகிறேன் பார்" என நமக்குத் தம் செயலனைத்தையும் காட்டி இறுமாத்தலை அறியோமா? புதிய உடை அணிந்தபோதும் புதிய அணி பூண்டபோதும் குழந்தை களிப்பது இச்செயனிலையால் அன்றோ? கண்டுமெச்ச ஒருவரும் இல்லையானால் குழந்தைக்குக் களிப்பில்லை. நாளடைவில் இச்செயநிலை தன்மேம்பாடு என்றஉயர்நிலையை அடைகின்றது. தன்னினும் எவ்வகையாலேனும் இழிந்தோரைக் கண்டபோது இவ் வியற்கைச்செயனிலை எழக் காண்கிறோம். சிறு நாய்களைக் கண்ட பெரிய நாய் இறுமாந்து நடத்தலைக் காண்க.

தன்னொடுக்கம் -இளிவரல்:—குழுநாட்டம் என்ற இயற்கைச்செயனிலையின் பயனாகச் சிற்சில இனத்தைச் சேர்ந்த விலங்குகள் மந்தைமந்தையாக வாழ்வதைக் கண்டோம். அம் மந்தைவாழ்க்கையில் ஓர் அமைதியைக் காண்கிறோம். ஒரு விலங்கு முன்செல்ல அதனைப் பின்தொடர்ந்து மற்றைய விலங்குகள் செல்கின்றன. இது கீழ்நிலை. உயர்நிலை யடைந்த விலங்குகளினிடையே முதலாளியாக ஒரு விலங்கு காணப்படுகின்றது. அதன்வழியே மற்றவை அனைத்தும் நடக்கின்றன. முதலாளியாக இருக்கும் விலங்கு ஆண்விலங்கே யாம். மற்றைய ஆண்விலங்குகளின் நிலை என்ன? சில மந்தைகளில் ஒரு ஆண்தான் இருக்கும்; மற்றைய ஆண்விலங்குகள் ஓட்டிவிடப்படுகின்றன. இதன் பயனாக மந்தை சிறுத்துப்போவதால் மந்தை வாழ்க்கையின் முழுப்பயனையும் அடையமுடியாமற் போகின்றது. ஆகையால், உயர்நிலை யடைந்த யானைமுதலிய விலங்குகளினிடையே ஆண்விலங்குகளை ஓட்டிவிடும் வழக்கம் இல்லை. ஆனால் ஆண்விலங்குகள் அனைத்தும் முதலாளிகளானால் அமைதியேது. அவற்றில் ஒன்றே அரசனென விளங்குகின்றது. மற்றவை அதற்கு அடங்கி நடக்கின்றன. சண்டையில் எதிரிகளை அடக்கி மற்றவற்றிற்கு அச்சத்தை ஊட்டி ஆள்கின்ற விலங்குகளையும் காண்கின்றோம். இவ்வாறு போர்முனையில் அச்சத்தால் ஆளுவதென்றால் மந்தைவாழ்க்கையின் பயனை அடைய முடியுமா? அன்றியும், போரில் எதிரிகள் எதிர்நின்றபோதெல்லாம் உயிர்கள் வீணாக அன்றோ மடியும். இவ்வீணழிவு நீங்கும்படி உயர்நிலையடைந்த விலங்குகளிடை இரண்டு இயற்கைச்செயல் நிலைகளை இயற்கையன்னை படைத்தருளினாள். தன்னெடுப்புள்ளதாய் ஒரு விலங்கு அரசனாய்த் திகழ, மற்றையவை தன்னொடுக்கமுள்ளவையாய்க் கீழ்ப்படிந்து நடக்கின்றன. இவ்வாறு இவ்விரண்டு இயற்கைச் செயனிலையும் ஒன்றுக்கொன்று பொருத்தமுள்ளவையாய் இயற்கையில் அமைந்து கிடக்கின்றன. இவ்வியற்கைச் சூழ்ச்சியை என் என்பது!

தன்னொடுக்கம் என்பது வணக்கமே யாம். தசைநார்கள் உரங்குன்றி மெலிகின்றன. மெல்ல நகர்கின்றோம். கீழ்க்கண் பார்வையாகச் சிறக்கணிக்கின்றோம். தலைவிரித் தாடியதுபோய்த் தலைகுனிந்து நிற்கின்

ரேும். சிறுநாய்கள் பெருநாயைக் கண்டதும் வாலைப் பின்னங்காலிடையே தொங்கவிட்டுக் காலை மடக்கித் தரையோடுதரையாக நகர்ந்துபோவதைக் காண்க. பிறர் தன்னைப் பாராதவாறு நடந்துகொள்வதே இதன் இயல்பாம். தன்னுணர்ச்சியின்றியும் இச்செயனிலை எழுதலின் இது நாணம் என்பதினும் வேறும். ஆனால் நாணம் இங்குத்தான் முளைவிடுகின்றது. இதற்கேற்ற மெய்ப்பாட்டினை இளிவரல் என வழங்குவோம். அச்சம் என்பதினும் இது வேறு. புத்தம் புது ஆள் வந்தபோது தாய்மடியிற் குந்திக்கிடக்கும் குழவி முகத்தைத் திருப்பிக்கொண்டு பேச்சின்றிக் கீழ்க்கண்ணால் பார்க்கின்றது. இந்நிலையில் இளிவரல் உண்டேயன்றி அச்சம் இல்லை என்று மக்கேல் என்ற பெரியார் விளங்கி வைக்கின்றார்.

தமிழ்ப் பாடம் 122.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[371-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

ஈ இருக்குமிடமும் பாண்டவர்க்குத் தரமுடியாதென்று துரியோதனன் கூறிவிடக் கண்ணபிரான் அவையிருந்து நீங்கிப் போயினன்.

வன்பி னலவனி வௌவ வென்றகொ
லென்மனையி லுண்டியை மறுத்தவன்
றன்ப தாகினியொ டினிதருந் தும்வகை
தன்னி லின்னமு தியற்றின
னென்பி தாவொடு பிறந்து மின்றளவு
மென்னை யோதன மருந்தியு
மன்பு தானுடை யனல்ல னென்பகை
தனக்கு முற்றபகை யல்லவோ. 58.

கண்ண னகன்றபின் துரியோதனன் சினத்துடன் விதுரனை நோக்கி விளம்புவான்

பதவுரை.

என் பிதாஒடு - எனது தகப்பனேரோடு, பிறந்தும் - பிறந்தவனுயிருந்தும், இன்று அளவு - இன்றுவரை, என்னை ஓதனம் - என்னுடைய சோற்றை, அருந்தியும் - உண்டவனுயிருந்தும், (விதுரன்) வன்பினால் - வலிமையினால், அவனி—ராஜ்யத்தை, வௌவ-கைப்பற்ற, என்று கொல் - என்றே; என் மனை இல் - எனது வீட்டில், உண்டியை - உணவை, மறுத்தவன் - மறுத்தவனுகிய கிருஷ்ணனை, தன் பதாகினி ஒடு - அவனது பரிவாரங்களோடு, இனிது அருந்தும் வகை - நன்கு சாப்பிடும்படி; தன் இல்-தன் வீட்டில்- இன்-இனிமையான, அமுது- ஆகாரம், இயற்றினன், அளித்து உபசரித்தான்;

(ஆகவே விதுரன்) அன்பு தான் உடையன்—என்னிடத்தில் அன்பு உடையவன், அல்லன் - அல்லாதவன்.

(அன்பு இருக்குமானல்) என் பகை-எனது பகைவன், தனக்கும் - தனக்கும், உற்ற பகை - ஏற்பட்ட பகைவனுக, அல்லவோ - கருதமாட்டானே.

விரிவுரை:-துரியோதனனது சீற்றம் இப்பொழுது விதுரன்மீது பாய்ந்தது. ''எனக்குப் பகைவனென நின்ற கண்ணனை நீ வரவழைத்து உபசரிக்கலாமோ; பகைவருடன் கலந்துகொண்டு என் அரசைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டு மென்பது உன் கருத்தோ. என் சோறுதின்ற நன்றி யுனக்கில்லையே. என் பிதாவொடு பிறந்தவனே இத்துரோகம் செய்வது'' என்று ஏசுவதி லடங்கிய அற்பத்தனம் துரியோதனனது குணத்திற்கு ஏற்றதே. நன்னெறி பிறழ்ந்தவர் ஒருவரையும் நம்பமாட்டார்.

முதல்வி ழைந்தொரு வனுட னியைந்த
பொருள்பற்றி யின்புற முயங்கினு
மதிக மென்றபொரு ளொருவன் வேறுதரி
னவனையே யொழிய வறிவரோ
பொதும டந்தையர் தமக்கு மண்ணிலிது
புதுமை யல்லவவர் புதல்வனும்
விதுர னின்றவ னொடுறவு கொண்டதொர்
வியப்பை யென்சொலி வெறுப்பதே. 59.

பொருளையே விழையும் வேசியர்மகனை விதுரன் என்செய்யான், என்று துரியோதனன் ஏசுகின்றான்.

பதவுரை,

முதல் - முதலிலே, இயைந்த - கவரக்கூடிய, பொருள் - பொருளை, விழைந்து - ஆசைப்பட்டு, பற்றி - அதைப் பறித்துக்கொண்டு, ஒருவனுடன் - ஒருவனேடு, இன்பம் உற - இன்பம் ஏற்படுமாறு, முயங்கினும் - சேர்ந்தாலும், வேறு ஒருவன் - மற்றொருவன், அதிகம் என்ற - (முன்னவனது பொருளைவிட) அதிகம் என்று சொல்லக்கூடிய, பொருள் - பொருளை, தரின் - தருவானுனல், அவனையே ஒழிய - அவனைத்தவிர வேறு எவனையும், அறிவரோ - அறிவாரோ (அறியமாட்டார்)

மண்ணில் - இவ்வுலகத்தில், இது - இச்செயல், பொதுமடந்தையர் தமக்கு - பொதுமகளிர்களுக்கு, புதுமை அல்ல - புதுமையானது அன்று.

அவர் - அத்தகையவர், புதல்வனும் - பிள்ளையாகிய, விதுரன் - விதுரன், இன்று - இன்று, அவனெடு - கிருஷ்ணனேடு, உறவுகொண்டது ஓர் - உறவு கொண்டதான ஒரு செயலின், வியப்பை - விந்தையை, என் சொலி - என்ன சொல்லி, வெறுப்பது - வெறுத்துரைப்பேன்.

விரிவுரை:—அநீதியாய் வையப் புகுகின்ற துஷ்டர்கள் பொய்யாகக்கூடச் சில குற்றங்களைக் கற்பனை செய்துகொண்டு பழிக்கத் தலைப்படுவார். விதுரனது பிறப்பைப்பற்றி முன் (3-வது வால்யூம் 29 பக்கத்தில்) கூறியிருக்கின்றேம். வேதவியாசருக்கும், அம்பாலிகையின் தாசிக்கும் பிறந்தவர் விதுரர். இங்குத் தாசி என்னுஞ் சொல் 'ஏவல் செய்பவள்' என்ற பொருள் உடைத்து, 'பரத்தை' என்ற பொருள் இல்லை. இது வெளிப்படை. துரியோதனனும் அதனை அறிவான். ஆயினும், தாசி என்பதும் வேசி என்பதும் ஒருபொருள்படப், பேசுகின்ற வழக்கை நினைவிற்கொண்டு துரியோதனன், தாசியின் மகனுகிய விதுரனை 'வேசி மகன்' என வாய்

கூசாது நிந்திக்கின்றான். பெரியோரைப் பழிக்க அஞ்சார் பாவியர்கள். தன் பிதாவொடு பிறந்த ஒருவனை இவ்வண்ணம் தூற்றப் பொய்யிலே தோய்ந்த நாக்கே துணியும்.

இன்ன வாறிவ னுரைத்த போதவ
னெழுந்தி ருந்துவசை யென்னைநீ
சொன்ன வாய்குருதி சோர வாள்கொடு
துளைத்துநின் முடி துணிப் பன்யான்
மன்ன வாகுரு குலத்திலே யொருவன்
மைந்த னருயிரை வௌவின
னென்ன வானவர் நகைப்ப ரேயெனை
யுரைத்த நாவுட னிருத்தியோ. 60.

அவ்வசைக்கு ஆற்றாத விதுரன் சினந்துரைக்கின்றான்

பதவுரை.

இன்னவாறு- இன்னபடி, இவன் உரைத்தபோது - துரியோதனன் உரைத்தபோது, அவன் எழுந்திருந்து - விதுரன் எழுந்திருந்து, என்னை நீ -என்னை நீ, வசை சொன்ன - வசை கூறின, வாய் - வாய், குருதிசோர - இரத்தம் பெருக, வாள்கொடு - வாள் கொண்டு, துளைத்து - குடைந்து, நின்முடி - உன் தலையையும், யான் துணிப்பன் - நான் வெட்டுவேன்.

மன்னவா - அரசனே, குருகுலத்திலே - குருகுலத்திலே, மைந்தன் - மகனது, ஆர் உயிரை - அருமையான உயிரை, ஒருவன் வௌவினன்-ஒருவன் கவர்ந்தான், என்ன - என்று, வானவர் - தேவர்கள், நகைப்பரே - நகைப்பார்களே (என்று சும்மா விருக்கின்றேன்)

(இல்லையேல்) எனை உரைத்த - என்னை ஏசிய, நாவுடன் - நாவோடு, இருத்தியோ - இருப்பாயோ. (என்று கூறினன்)

விரிவுரை:—''மன்னவன் என்ற இறுமாப்பினலோ இவ்வளவு நீ என்னை ஏசத் துணிந்தனை; இவ்வுரை வந்த வாயிலிருந்து இரத்தமும் வரக் கண்டு பிறகு உன் தலையையும் வெட்டவேண்டுமெனில் எனக்கது இயலாதோ. செய்தாலும் யான் தக்கதே செய்தேனென்று இப் பூவுலகத்தவரனைவரும் பாராட்டுவாரேயல்லாமல் என்பால் ஒருவரும் எக்குறையுங் காணர். பிறர்வசை பொறுக்காமை க்ஷத்திரிய தர்மமேயாகும். எனினும், 'கடுஞ்சொல் சில மதியிலாத் துரியோதனன் கழறினுற்றான் என்! மைந்தனென்றும் பாராது, பிறர் பிழை பொறுத்திடும் பெருமையையும் நோக்காது, தத்துவத் தூய்மையோன் என்ற பேருடைய இவ்விதுரன் கொன்றேயோ கடிவது; குருகுலத்தினழகு இதுவேயோ'' எனத் தேவர்கள் நகைப்பினும் நகைக்கலாம் என்னுமோர் நினைவினலன்றே உன் சிரத்தைத் தரையில் உருட்டாதிருக்கின்றேன்'' என்னும் பொருளது இச் செய்யுள்.

வர்த்தமானம்

ராஜப்பிரதிநிதியின் அறிக்கை:—இந்தியாவின் தற்கால நிலைமையை ஒட்டியும், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியா விஷயமாய்க் கொண்டுள்ள நோக்கத்தைப்பற்றியும் ராஜப்பிரதிநிதி வெளியிட்ட அறிக்கையில் இந்தியச் சீர்திருத்த விஷயமாய் நிர்மாணம் செய்ய இந்தியத் தலைவர்களையும் பிரிடிஷ் ராஜதந்திரிகளையும்கொண்டு ரௌண்டேபில் மகாநாடு அக்டோபர் 20-ந்தேதி லண்டனில் கூடுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் சுருக்கம் வருமாறு:—

"நான் 1929, நவம்பர் மாதம் பிரிடிஷ் அரசாங்கத்தின் முடிவான நோக்கம் இந்தியாவிற்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்து அளிப்பது என்பதை எனது அறிக்கை மூலம் அறிவித்தேன். பிறகு லண்டனில் கூடவிருக்கும் ரௌண்டேபில் மஹாநாடு விஷயமாய் இந்தியத் தலைவர்களான காந்திஅடிகள் மோட்டிலால் நேரு ஆயவர்களுடன் பேசினேன். அவர்கள் குடியேற்றநாட்டு அந்தஸ்து கொடுப்பதாக வாக்குறுதி தந்தால்தான் தாங்கள் ரௌண்டேபில் மஹாநாட்டில் கலந்துகொள்ளமுடியும் என்று கூறிப் பின்னர்க் காங்கிரஸ் மஹாநாட்டில் முழுவிடுதலைத் தீர்மானமும் செய்தனர். பிறகு சட்டமறுப்பு இயக்கம் துவக்கமாயிற்று. அவ்வியக்கம் எனது அரசாங்கம் எதிர்பார்த்தபடியே பலாத்காரச் செயல்களை எழுப்பின. சட்ட மறுத்தலையும், பலாத்காரச் செயல்களையும் அடக்கி, ஒழுங்கையும் அமைதியையும் நிலைநிறுத்துவது என் அரசாங்கத்தின் கடமையாகும். அதற்கேற்ப வருத்தத்துடன் மாகாண அரசாங்கங்கள் அவசியமானபடி சட்ட விரோதமான செயல்களைத்தடுத்து வருகின்றனர். எனினும் அரசாங்கத்தாரின் நோக்கம் மாறுபடவில்லை. குடியேற்றநாட்டு அந்தஸ்து அளிப்பதே அரசாங்கத்தாரின் நோக்கம் என்பதை மீண்டும் தெரிவிக்கின்றேன் இப்போது ரௌண்டேபில் மஹாநாடு கூட்ட ஏற்பாடு நடக்கின்றது. அம்மகாநாடும் அக்டோபர் 20-ந் தேதியில் கூடலாம். அதற்கு இந்தியப்பிரதிநிதிகள் சென்று கூட்டுறவுதந்து உழைத்தல் நலமாகும் என்வே இந்தியத் தலைவர்களை இச்சமயம் கூட்டுறவு தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். அப்படிச் செய்வதால் ஸ்நேகப்பான்மையில் இந்தியாவின் அரசியல் வளர்ச்சி தடையுறாது வளர்ந்துவரும்.

R. சுப்பிரமணிய ஐயர் இயற்றிய தமிழ்ச் சட்டப் பிரசுரங்கள்.

பெரிய ஹிந்து லா ரூ. 2, புதிய விவகார சிந்தாமணி என்கிற தஸ்தாவேஜுகளின் சட்டம் ரூ. 2-8, கிரிமினல் ப்ரோஸீஜர் கோட் என்கிற க்ரிமினல் லா ரூ. 3, புது ஹிந்து தர்மஸ்தாபனச் சட்டம் ரூ. 1, தர்ம சொத்துகளின் டிரஸ்டி ஆக்ட்டு அணு 14, நில ஆக்கிரமிப்புச் சட்டம் அணு 4, கிராம முனிசீப் மான்யூல் கிராமச் சுகாதாரம் ரூ. 1-10, லோக்கல் போர்ட் ஆக்ட் ரூ. 1-8, மகமதியர் லா ரூ. 2, புது ஸ்டாம் பாக்ட் அணு 12, புது இன்கம்டாக்ஸ் (வருமான வரிச் சட்டம்) ரூ. 1, எஸ்டேட் லாண்ட் ஆக்ட் (ஜமீன்குடி நிலச் சட்டம்) ரூ. 1-4, கால நிர்ணயச் சட்டம் அணு 8, ரெஜிஸ்ட்ரேஷன் சட்டம் அணு 10, சிவில் லா என்கிற சிவில் ப்ரோஸீஜர் கோட் ரூ. 3, இந்தியன் பினல்கோட் சட்டம் ரூ. 3, புதிய கிராமப் பஞ்சாயத்து ஆக்ட் ரூ. 1-4, பரம்பரையான கிராம ஊழியம் அல்லது உத்தியோகங்களைக் குறித்தச் சட்டம் ரூ. 1, இந்து தேசத்துச் சாட்சி ஆக்ட் ரூ. 1.

வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்:—

சுகந்த புஷ்பம் ரூ. 1, சாருலோசன (முதற் பாகம்) ரூ. 1, கோபாலரத்தனம் அணு 14, வீரவஸந்தா அணு 8, மாதவமணி அணு 3, வைதேகி (2-பாகங்கள்) ரூ. 2-8, பத்மசுந்தரம் 2-பாகம் ரூ 2-8, ராதாமணி 2-பாகம் ரூ. 2, சண்பக விஜயம் ரூ. 1-12, கௌரி முகுந்தன் ரூ. 1-12, நவநீதகிருஷ்ணன் ரூ 2.

V. S. T. Swamy Novel Depot. VEPERY, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருத்தப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

189/04

நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.
(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)
இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.
குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.
வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.
பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—
கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK
BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.
An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.
Every student of History would read this book with pleasure and profit.
Price Rs. 5—8—0. V. P. Charge Extra.
MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம் பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,, ,,	2 8 0
தனிப்பிரதி விலை	அணா	0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

ரூ. 500 இனாம்! எப்படி?

விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,
தபாற்பெட்டி 99. சென்னை.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)